www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 13
மடல் : 12

தி.பி. 2030 : சிலை
கி.பி. 1999 : டிசம்பர்

விலை ரூ.5.00




படிப்பகம்

www.padippakam.com

# நிறை - குறை

## தமிழ்த் தேசிய வாதிகளுக்கு தனிப் பண்பு வேண்டும்

தமிழர் கண்ணோட்டத்தின் தலையங்கங்களுக்கு எப்போதுமே தனிச் சிறப்புண்டு. ஆழமாகவும் அகலமாகவும் நுட்பமாகவும் சீர்தூக்கிப் பார்த்து மனதில் பட்டதை வெளிப்படையாகக் கூறும் தலையங்கங்கள் அவை.

அவைகளில் மகுடம் வைத்தாற்போல் நவம்பர் மாதத் தலையங்கம் 'கொலையுண்டவர் ராஜீவ் காந்தி என்பதாலா?' என்ற தலைப்பில் வந்தது. உச்ச நீதிமன்றம் எங்கு தடுமாறி, தடம் பிறழ்ந்து போனது என்பதைத் தீர்ப்பு விவரங்களுடன் தந்துள்ளது. அத் தலையங்கம்.

மனித உரிமைகள் மீண்டும் தூக்கிலிடப்பட்டன. ராஜீவ் காந்தி பெயரால் என்பது துல்லியமாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

சரியாகச் சொன்னால், சான்றிதழ்களில் மட்டுமே சாதி இருக்க வேண்டும். ஆனால் சமூகத்தில் அங்கிங்கெனாதபடி எல்லா விடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது சாதி. தமிழ்த் தேச நலனில் அக்கறையுள்ளர்வர்கள் எப்படியிருக்க வேண்டும் என்னென்ன செயலாற்ற வேண்டும் என்பதைக் குறைந்தபட்ச திட்டமாக 'தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் சாதிய மாசுகள்' கட்டுரையில் இரா.சோ. வற்புறுத்தி எழுதியுள்ளது இன்றையத் தேவையை நிறைவு செய்யும் ஒருமுன் முயற்சி (**Pioneering effort**) அம்முயற்சி பாராட்டுக்குரியது.

எந்த அணியிலிருந்தாலும் சரி, தமிழ்த் தேச எழுச்சிக்குப்பாடுபடுவோர் அக்கட்டுரை முன்னிறுத்தும் கொள்கைகளை மனமுவந்து ஏற்று நடைமுறைப்படுத்துவதில் அக்கறையும் ஆர்வமும் செலுத்தி முன்னுதாரணமாய் விளங்க வேண்டும். தமிழ்த் தேசிய வாதிகளுக்கென தனிப்பண்பு நலனும் உயர் நோக்கும் உண்டு என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

– **சிதம்பரன்.கி.,** ஈரோடு.

## நேரடிப் பகைவுணர்வு கிடையாது

அட்டையில் மாவோ படம் பொருத்தமானது. கச்சத்தீவுப்பிரச்சினை வர்க்கப்பிரச்சினை - இனப்பிரச்சினை என்ற இரு அம்சங்களைக் கொண்டுள்ளது. என்.ஜே.போஸ் கொடுத்த நேர்முகத்தை வைத்துப்பார்க்கும் போது சிங்கள ஆளும்வர்க்கமும் இந்திய ஆளும் வர்க்கமும் தான் பிரச்சினைக்கு முக்கியக் காரணம் என்று தெரிகிறது. தமிழக சிங்கள மீனவர்களுக்கிடையே நேரடியாக எந்தப் பகை உணர்வோ ஆதிக்க உணர்வோ இருப்பதாகத் தெரியவில்லை.

**மணிலா,** தஞ்சை.

## தீர்வுகள் தெளிவாக

இராசேந்திரசோழனின் "தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் சாதிய மாசுகள்" கட்டுரை சாதியத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான தீர்வுகளைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. பாராட்டுகள்.

- **தி.முத்துக்குமார்,** சென்னை - 113.

## படிப்பினை

பரிமுதல்வனின் "ஐம்பதாண்டு நிறைவு விழா காணும் மக்கள் சீனம்" கட்டுரை சீனத்திடம் இருந்து இந்திய ஒன்றியம் பெற வேண்டிய படிப்பினைகளை உணர்த்தியது.

- **ந. அப்துல் ரகுமான்,**ஆங்காங்.

## முகப்புப் படத்திற்குப் பாராட்டு

மாபெரும் புரட்சியாளர் மாசேதுங் படம் முகப்பில் வெளிவந்ததற்குப் பாராட்டுகள். கூலி உழவர்கட்கும் உழைப்பாளர்கட்கும் விடுதலை பெற்றுத் தந்த உண்மைத் தலைவர் மாசேதுங்.

இராசேந்திர சோழனின் 'சாதிய மாசுகள்' கட்டுரை அற்புதம். தமிழர்கள் கைக் கொள்ள வேண்டிய முறைகளை அழகாகக் கூறியுள்ளார்கள்.

- **தி. நா. அறிவரசு ,** திருப்பூர்.

## மொழியாக்கம்

Self determination என்பதைத் "தன் உருவாக்கம்" என்று மொழி பெயர்க்கலாம். இதே போல இதையொட்டிய தொடர்களை மொழியாக்கம் செய்யலாம்.

- **இராம. பாண்டுரங்கன்,** ஆரணி - 632 301.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்


டிசம்பர் 1999

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்

# ஆளுநரின் அத்துமீறல் தோற்றது

நால்வர் கருணை மனுவை ஆளுநர் பாத்திமா பீவி அவசர அவசரமாக தள்ளுபடி செய்தது தவறு; அவரது அதிகார வரம்பை மீறிய செயல் என்று உயர்நீதி மன்றம் அறுதியிட்டு அறிவித்து விட்டது.

நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வர், கடந்த 16.10.99 அன்று தாக்கல் செய்த கருணை மனுவை பத்தே நாளில் தள்ளுபடி செய்து ஆணையிட்டார் ஆளுநர். அமைச்சரவையின் ஆலோசனை கூட பெறாமல், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மனுவில் உரிய அளவு மனதைச் செலுத்தாமல் இவ்வளவு அவசரமாக அவர் செயல்பட்டது அதிர்ச்சி தருவதாகவே இருந்தது.



ஆளுநர் தனது நிர்வாக அதிகார வரம்பை மீறி, ஒருதலைபட்சமாக முடிவு மேற்கொண்டுள்ளார் என்பதை விளக்கி, அவரது ஆணையை எதிர்த்து சென்னை, உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. நீதிபதி கோவிந்தராசன் முன்னிலையில் இவ்வழக்கு நடைபெற்றது.

இவ்வழக்கில் மூன்று முக்கிய செய்திகள் விவாதத்திற்கு வந்தன.

1. ஆளுநரின் முடிவை நீதிமன்றம் ஆய்வு செய்ய அதிகாரம் உண்டா?

2. ஆளுநரின் நிர்வாக அதிகாரம் என்பது அவரது தனிப்பட்ட விருப்பார்ந்த அதிகாரமா?

3. கருணை மனுவைப் பற்றி குறிப்பு ஏதும் எழுதாமல் அக்கோப்பை அப்படியே அமைச்சரவை அனுப்பி வைத்தால், அப்போது ஆளுநர் என்ன செய்வது?

நீதிமன்ற ஆய்வு வரம்பைப் பற்றி விளக்கிய நீதிபதி கோவிந்தராஜன் தனது முடிவுக்கு ஆதாரமாக கேஹர்சிங் வழக்கை எடுத்துக் காட்டினார். இவ்வழக்கில் இதே கேள்வி முன் வைக்கப்பட்ட போது உச்ச நீதிமன்றம் இதனைத் தெளிவுபடுத்தி உள்ளது. அது கூறுவதாவது:

“குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் உத்தரவு சரியா தவறா என்ற வாதத்தில் இறங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லைதான். ஆனால் குடியரசுத் தலைவரோ அல்லது ஆளுநரோ

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**பெ. மணியரசன்**
ஆசிரியர்,
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே.: **32994**

அச்சிட்டோர்
**நீட் பிரிண்டர்ஸ்,**
சென்னை - 600 003.

வடிவமைப்பு
**காவிரி கணிப்பொறி அச்சு,**
தஞ்சாவூர் - 613 001.

❖❖❖

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்குள் செயல்பட்டிருக்கிறாரா இல்லையா என்பதை ஆய்வு செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு" (A.I.R. 1989 உச்ச நீதிமன்ற வழக்குகள் - பக்கம் 653).

ராஜ்ஸ்தான் மாநில அரசுக்கும், இந்திய ஒன்றிய அரசுக்கும் இடையில் நடந்த ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் "ஒரு அதிகார நிறுவனம் அரசமைப்புச் சட்டம் தமக்கு வழங்கியுள்ள அதிகார வரம்புக்குள் நின்றுதான் செயல்பட்டிருக்கிறதா என்று கண்காணிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உண்டு. மேலும், அரசமைப்புச் சட்டத்தின் பொருள் பற்றி விளக்கும் இறுதி அதிகாரம் உச்சநீதிமன்றத்திற்கே உண்டு" என்று கூறுவதை நீதிபதி. கோவிந்தராஜன் எடுத்துக் காட்டியுள்ளார்.

எனவே நால்வர் கருணை மனுவை ஆளுநர் நிராகரித்து உத்தரவிட்டதைப் பற்றி விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்பது உறுதியாகிறது.



குடியரசுத் தலைவருக்குள்ள "மன்னிப்பு அளிக்கும் அதிகாரம்" பற்றி அரசமைப்புச் சட்ட விதி 72 கூறுகிறது. ஆளுநருக்கு இவ்வித அதிகாரம் இருப்பதை விதி 161 கூறுகிறது.

குடியரசுத் தலைவர் இந்திய அமைச்சரவையின் ஆலோசனைப் படிதான் நடக்க வேண்டும் என்று விதி 74 கூறுவதால், குடியரசுத் தலைவர் அதிகாரம் பற்றி குழப்பம் எழுவதில்லை.

ஆனால் ஆளுநரின் அதிகாரம் சற்று வேறுபட்டது என்பதால் விதி 161 அளிக்கும் அதிகாரம் குறித்து குழப்பம் ஏற்படுவது உண்டு. விதி 161 கூறுவதாவது:

"குற்ற தண்டனை பெற்றவருக்கு, மன்னிப்பு வழங்குவதற்கும், அத் தண்டனையைக் குறைப்பதற்கும், ரத்து செய்வதற்கும், விடுவிப்பதற்கும் அல்லது தண்டனையை நிறுத்தி வைப்பதற்கும், ஒருவகை தண்டனையை மற்றொரு வகையாக் மாற்றுவதற்கும் ஒரு மாநில ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரம், மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் வருவதாகும்".

மாநில அரசின் நிர்வாகம் ஆளுநர் பெயரால்தான் நடைபெறுகிறது. எல்லா ஆணைகளும் 'ஆளுநரின் ஆணைப்படி'தான் வெளியாகின்றன. இந்த நிலையில் 'மாநிலத்தின் நிர்வாக அதிகாரம்' (Executive Power of the State) என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது. 'ஆளுநர்' என்று குறிக்கப்படுவது தனிப்பட்ட முறையில் ஆளுநரையா?

இந்த கேள்வி சம்ஷேர்சிங் - எதிர் - பஞ்சாப் மாநில அரசு என்ற வழக்கில் உச்சநீதிமன்ற அரசமைப்புச் சட்ட ஆயத்தின் முன் வந்தது. அதில் தீர்ப்பளித்த நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் தமது தீர்ப்புரையில் இச்சிக்கல் குறித்து விளக்கி உள்ளார்.

'விதி 161 என்பது ஆளுநரின் விருப்பதிகார வரம்பிற்குள் வருவதில்லை. மாநில ஆட்சியை அன்றாடம் நடத்திச் செல்வதற்கான நிர்வாக அதிகாரத்தின் கீழ் வருவதாகும்" (1974 - உச்சநீதிமன்ற வழக்குகள் - பக்கம் 831)

சரி, இந்த நிர்வாக அதிகாரத்தை எவ்வாறு செயல்படுத்துவது? இது பற்றித் தெரிந்து கொள்ள மாருராம் - எதிர் - இந்திய அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சென்னை, உயர்நீதிமன்றம் துணைக்கு அழைத்தது. மாரூராம் வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறுவது:

**ஆளுநர்தான் மாநில அரசின் நிர்வாக அதிகாரத்தின் பீடமாவார். ஆனால், அவர் மாநில அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில்தான் செயல்பட முடியும்; அந்த ஆலோசனையைப் பின் பற்றுவதைத் தவிர வேறு வகையில் அவர் செயல்பட முடியாது. ஆளுநர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அரசாங்கம் ஆளுநருக்கு ஆலோசனை வழங்கலாம். அதன்படி ஆளுநர் நடந்தே ஆக வேண்டும். இதைத்தான் விதி 161 கூறுகிறது. கருணை மனுமீது தண்டனைக் குறைப்பு அல்லது மன்னிப்பு என்பது மாநில அரசாங்க முடிவை அடியொற்றியதாகும். இதன் செயல்பாட்டுக்கு ஆளுநரின் அங்கீகாரம் அவசியமில்லை. இருந்த போதிலும் நடவடிக்கை விதிகளின் படியும் அரசமைப்புச் சட்ட இங்கிதத்தின்படியும் ஆளுநரின் கையெழுத்தை பெற்றே மன்னிப்போ, தண்டனைக் குறைப்போ, விடுதலையோ வழங்க வேண்டியதாகிறது" (A.I.R. 1980 உச்ச நீதிமன்ற வழக்குகள் - பக்கம் 2147)**

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

எனவே, விதி 161ன் படி கருணை மனு மீது முடிவு எடுக்கும் முன்பு அமைச்சரவையின் கருத்தை ஆளுநர் கேட்டே ஆக வேண்டும்

நால்வர் தரப்பில் இந்த வாதம் முன் வைக்கப்பட்டபோது, இதனை ஒருவாறு ஒத்துக் கொண்ட தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் தமக்குச் சாதகமாக அரசின் செயல்விதிகளை (**Business Rules**) எடுத்துக் காட்டினார். செயல் விதி 11, ஆளுநர் எந்தெந்த வகை கோப்புகளை அமைச்சரவைக்கு அனுப்பி, அதன் ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்று பட்டியலிடுகிறது. இந்தப் பட்டியலில் விதி 161ன் படியான கருணை மனு பற்றி குறிப்பிடப்படாததால் அமைச்சரவையின் ஆலோசனை பெற வேண்டியதில்லை என்று பொருள் என்பதே அவரது வாதம்.

அரசமைப்புச் சட்டத்தை விட செயல் விதிகள் மேலோங்கிய அதிகாரம் பெற்றதில்லை என்பதையும், செயல் விதி 11 கருணை மனு பற்றி மவுனம் சாதிக்கிறது என்பதாலேயே, அது ஆளுநரின் தனிப்பட்ட அதிகார வரம்புக்குள் வருவதாக பொருள் கொள்ளக் கூடாது என்பதையும் எடுத்துக் காட்டி, உயர்நீதிமன்றம் இந்த வாதத்தை நிராகரித்தது.

கடைசியாக இன்னொன்றை அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் தமது வாதத்தில் முன் வைத்தார். "நால்வர் கருணை மனுவை ஆளுநர் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்தார். முதலமைச்சரே மாநில உள்துறைக்கும் பொறுப்பானவர். கருணை மனுவையும் அது தொடர்பான மற்ற கோப்புகளையும் முதலமைச்சர் குறிப்பு ஏதுமின்றி ஆளுநருக்கே அனுப்பி வைத்தார். இதற்கு மேல் அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்று கோர முடியாது" என்பதே அவரது வாதம்.

இதே வாதத்தை சோ.வும் முன்வைக்கிறார். (காண்க. துக்ளக் 8.12.99)

"ஆலோசனை சொல்ல வேண்டியவர்கள் சொல்ல விரும்பாமல், ஆலோசனையை ஏற்க வேண்டிய நிலையில் உள்ளவருக்கு, தகவல்களை மட்டும் கொடுத்து, ஆலோசனை கூறாமல் விட்டால் - ஆலோசனையை ஏற்பவர் அந்தத் தகவல்களின் அடிப்படையில் முடிவை எடுப்பது முறையானதே என்பதே சட்டத்தின் இறுதியான தீர்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்" என்கிறார் சோ.

இதே சிக்கல் குறித்து புகழ்வாய்ந்த எஸ்.ஆர். பொம்மை வழக்கில் உச்சநீதிமன்றம் ஆணித்தரமாக பதிலளித்துள்ளது.

"அமைச்சரவை அனுப்பி வைக்கும் தகவல்களை ஆலோசனை என்று கூறமுடியாது. ஆலோசனை என்பது தகவல்கள் அடிப்படையில் செய்யப்படும் பரிந்துரையைக் குறிக்கிறது. தகவல் வேறு - ஆலோசனை வேறு. எழுத்துப் பூர்வமாக பெறப்படும் பரிந்துரையே அமைச்சரவையின் ஆலோசனை எனக் கொள்ள வேண்டும். அமைச்சரவை அனுப்பி வைக்கிற தகவல்களெல்லாம் ஆலோசனை ஆகிவிடாது" (1994 - உச்சநீதிமன்ற வழக்கு - பகுதி 1)

குறிப்புரை ஏதும் எழுதாமல் கருணை மனு குறித்த கோப்பை முதலமைச்சர் அனுப்பி வைத்தால், கருத்து ஏதும் இல்லை என்பதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. "மவுனம் சம்மதம்" என்பதெல்லாம் சட்டத்தில் உதவாது.

முதலமைச்சர் குறிப்புரை ஏதும் எழுதாதபோது, ஆளுநரின் கருத்தே இறுதியானது எனக் கொள்ள முடியாது ஆளுநர் அதனைக் கோரிப் பெற வேண்டும்.

இந்த அடிப்படையில் கருணை மனுவைத் தள்ளுபடி செய்த "ஆளுநரின் ஆணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே, இந்த ஆணை ரத்து செய்யப்படுகிறது. இந்த நான்கு வாதிகளிடமிருந்து மீண்டும் புதிதாக கருணை மனுவைப் பெற்று, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை ஒன்றை ஆளுநர் பிறப்பிக்கலாம்" என்று 25.11.99 அன்று சென்னை, உயர்நீதி மன்றம் தீர்ப்புரைத்தது.

இவ்வழக்கில் நான்கு தமிழர்கள் சார்பில் வழக்கை முன்வைத்த வழக்கறிஞர் திரு. சந்திரசேகர் அவர் சார்பில் வழக்காடிய மூத்த வழக்கறிஞர் திரு. சந்துரு ஆகியோர் நம் பாராட்டுதலுக்குரியவர்கள்.❖




**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# கொடியங்குளம் கலவரமும் கோமதி நாயகம் அறிக்கையும்

- நா. வைகறை

திரு. மு. கருணாநிதி 4ஆவ்து முறையாக முதலமைச்சர் பதவி ஏற்றவுடன், தமிழக காவல்துறை 80% கெட்டுப்போன நிலையில் உள்ளது என்றார். ஏனெனில் செயலலிதா ஆட்சியில் காவல் துறையின் அத்து மீறல்களும், காவல் நிலையச் சாவுகளும் ஏராளம். இப்படிபட்ட காவல் துறை சாதிய கலவரம் நடக்கும் போது அத்துமீறல்கள் எதுவும் செய்யவில்லை என்றால் நம்பும்படியாக இருக்கிறதா? நம்பத்தான் சொல்கிறது கோமதி நாயகம் அறிக்கை.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி, மாவட்டங்களில் 1995 ஆம் ஆண்டு சூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களில் ஆதி திராவிடர்க்ள் மற்றும் தேவர் சாதி, மக்கள் சம்பந்தப்பட்ட சில மோதல்கள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு, வழி வகுத்த காரணங்களையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் விசாரணை செய்வதற்காக 30.9.1995 அன்று ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி பி. கோமதி நாயகம் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது.

கோமதி நாயகம் தனது விசாரண்ணை அறிக்கையை 12.3.96 அன்று அரசுக்கு அளித்தார். இவ்வளவு காலம் தூசு படிந்திருந்த அந்த அறிக்கையை இப்போது தி.மு.க. அரசு தூசு தட்டி எடுத்தது. இந்த அறிக்கை 29.11.99 அன்று சட்டசபையில் வைக்கப்பட்டது. திருநெல்வேலி, தூத்துக்குடி, மாவட்டங்களில் நடைபெற்றது, சாதிக் கலவரம் அல்ல என்றும் இக் கலவரங்களில் காவல் துறை அத்து மீறல்கள் ஏதும் இல்லை என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அப்பட்டமான வடி கட்டிய பொய்.

26.7.95 அன்று வடநத்தம்பட்டியைச் சேர்ந்த பள்ளர் வகுப்பைச் சார்ந்த தங்கவேல் என்ற ஒட்டுனர் கட்டபொம்மன் போக்குவரத்து கழகப் பேருந்தை ஓட்டி வந்தார். வீரசிகாமணி கிராமத்தில் குறுக்கே வந்த பள்ளி மாணவர்களை திட்டினார். இதை தொடர்ந்து தங்கவேல் தாக்கப்பட்டார். செய்தி கேட்டு வடநத்தம் பட்டியைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வீரசிகாமணியில் கடைகளைத் தாக்கினார்கள். இக் கலவரத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அருகில் இருந்த தேவர் சிலை சேதமடைந்தது. இந்நிகழ்ச்சிதான் கலவரத்துக்கு காரணம் என்கிறது கோமதி நாயகம் அறிக்கை. ஆனால் பள்ளி மாணவர்களை தூண்டிவிட்டு கலவரத்தை உண்டுபண்ணியது யார் என்பதைப் பற்றி அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயில் வட்டம் வீரசிகாமணி கிராமத்தில் அமைந்திருக்கும் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவனும் தேவர் வகுப்பைச் சார்ந்த மாணவியும் காதல் கடிதங்களை பரிமாறிக்கொண்டதைக் கேள்விப்பட்ட தலைமை ஆசிரியர் மாணவனை அழைத்து சாதியைச் சொல்லி "உனக்கெல்லாம் காதல் ஒரு கேடா" என திட்டியிருக்கிறார். அம்மாணவன் பெற்றோரிடம் சொல்ல பெற்றோரும் ஊர் பெரியவர்களும் சாதியைச் சொல்லி திட்டிய தலைமை ஆசிரியரை கண்டித்துள்ளனர். இதனை அவமானமாக கருதிய தலைமை ஆசிரியர் பழனிச்சாமி பள்ளிக்குத் தேநீர் வழங்கும் சுந்தரராசுவுடன் சேர்ந்து நடத்திய நாடகமே தங்கவேல் தாக்கப்பட்டது. ஆனால் தேநீர் கடை சுந்தரராசுவை அறிக்கையில் மாணவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது கோமதி நாயகத்தின் முதல் குளறுபடி.

தேவர் சிலை தாக்கப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியர் ஜெயக்கொடி தலைமையில் சமாதானக் கூட்டம் நெல்லையில் நடைப்பெற்றது. பிரச்சினைக்குரிய சிலையை எந்த சிற்பி செய்தாரோ அதே சிற்பியால் அரசு செலவில் புதிய சிலை செய்யப்பட்டு அதே இடத்தில் நிறுவப்படும் என ஆட்சியர் அறிவித்தார். ஆனால் பிரச்சினை இத்துடன் தீரவில்லை.

வீரசிகாமணி கலவரத்தை தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான கலவரம் சிவகிரி, ஆலந்தா, காசிலிங்கபுரம் மற்றும் புளியம்பட்டி பகுதிகளில் கொழுந்து விட்டுடெறிந்தது. காவல் துறையினர் தேவர் வகுப்பு மக்களுடன் சேர்ந்து கொண்டு மேற்கண்ட ஊர்களில் துப்பாக்கி சூடு. மற்றும் சூரையாடலகள் நடத்தினர். காவல் துறையின் துப்பாக்கி சூட்டால் சிவகிரியைச் சார்ந்த இராக்கப்பன் முனியாண்டி, கல்யாண சுந்தரம், வனம் போன்றவர்கள் இறந்தார்கள். மாவட்ட ஆட்சியர் பன்னீர்செல்வம் சசிகலாவின் உறவினர். சாதி பித்தேறி மேற்கண்ட கிராமங்களில் காவல் துறையை கட்டவிழ்த்து விட்டார்.

ஒட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ள 43 கிராம பள்ளர் சமுகத்தினரின் தாய் கிராமமாக இருப்பது கொடியங்குளம். இங்கு சுமார் 400 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் அனைவரும் பள்ளர் சமூகத்தவர்கள். இவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் சற்று முன்னேறியவர்கள். இங்குள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் குறைந்தது ஒரு நபராவது வெளி நாடுகளில் வேலை செய்கிறார்கள்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

கொடியங்குளம் மக்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறியிருப்பதால் பிரச்சினை காலங்களில் மற்ற கிராம மக்கள் இவர்களை நாடுவது வழக்கம். இவ்வகையில் ஆகஸ்ட் 27ல் இங்கு கூடினார்கள். சில முடிவுகள் எடுக்கப்பட்டன. சாதி கலவரத்தில் பலியான கணேசன், தடிவீரன் குடும்பத்தினர்களுக்கு தமிழக அரசு தலா ரூ. 2 லட்சம் வழங்க வேண்டும். துப்பாக்கி சூட்டில் காயம் பட்டவர்களுக்கு தலா ரூ.50,000 வழங்க வேண்டும். தலித் தலைவர்கள் பசுபதி பாண்டியன், ஜான்பாண்டியன், திட்டக்குடி பெரியசாமி போன்றவர்களை குண்டர் சட்டத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

இதையடுத்து புளியம்பட்டி பாதிரியார் சந்தியாகு, மாவட்ட ஆட்சியர் பன்னீர்செல்வம் இவர்களின் ஆலோசனைகளின் படி கொடியன்குளத்தை சூறையாடுவது என முடிவு செய்யப்பட்டது. (புளியம்பட்டி பாதிரியார் சந்தியாகுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நிலம் தொடர்பாக பிரச்சினை இருந்து வந்தது.)

இக்கலவரத்திற்கு ஆப்பரேசன் வீனஸ் என பெயரிடப்பட்டது. ஆகஸ்ட் 31, 1995 காலை 10.15 மணிக்கு 25 காவல் துறை வாகனங்கள் கொடியங்குளம் எல்லைக்குள் நுழைந்தன. சுமார் 1000 காவலர்கள் இருந்தார்கள். காவலர்கள் மட்டும் இன்றி செயலலிதாவின் இல்லத்தை காவல் செய்யும் சசிகலாவிற்கு சொந்தமான 'அழகு செக்கூரிட்டி சர்வீஸ்' ஆட்களும் வந்தார்கள்.

இவர்கள் எதிரி நாட்டை பிடிக்க வந்த படைகள் போல், மாவட்ட ஆட்சியர் பன்னீர் செல்வம், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் சுனில் குமார்சிங் கூட்டு தலைமையின் கீழ் ஆயுதம் தாங்கி கொடியங்குளத்தை சூறையாடினார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளில் இருந்த பொருள்கள் அழிக்கப்பட்டன. தொலைக்காட்சிப் பெட்டி போன்ற விலை உயர்வான பொருட்களை காவல்துறையினர் களவாடினர். அம்மக்கள் பயன்படுத்தும் நீர்நிலைகளில் நஞ்சுகலந்தார்கள்.

அன்றைக்கு 'சன் டி.வி.' உள்ளிட்ட அனைத்து தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும் இக் கலவரத்தில் காவல்துறையின் அத்து மீறலை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டின. மனித உரிமை அமைப்புகள் கண்டித்தன. தி.மு.க.வும் தனது தேர்தல் பிரச்சாரத்தில் இச் சிக்கலை கூறியது.

ஆனால் இக்கலவரங்களை ஆராய அமைக்கப்பட்ட கோமதி நாயகம் அறிக்கை இங்கு சாதி மோதல்கள் இல்லை என கூறுவது அதிர்ச்சியாக இருக்கிறது. கொடியங்குளம், ஆலந்தா, சிவலப் பேரி, சிங்கத்தகுறிச்சி, ஒட்டுடன்பட்டி கிராமத்தை சார்ந்த ஆதிதிராவிடர்களே பொறுப்பு என்று சொல்வது . அறிக்கையின் மீது நமக்கு சந்தேகத்தை உண்டாக்குகிறது.

"ஒரு காலத்தில் தேவர்கள் கலவரம் விளைவிப்பவர்களாக இருந்தார்கள். இப்பொழுது பணிவு இரக்கம் உள்ளவர்களாக மாறியுள்ளார்கள். அவர்கள் பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் உள்ளதே இதற்கு காரணம். அவர்களுக்கு சமுதாய அந்தஸ்து கிட்டியுள்ளது. தேவர்களில் பெரும்பானோர் நகர் பகுதியில் குடி பெயர்ந்து விட்டார்கள். இதனால் தற்போது அங்கு வன்முறையை தூண்டுபவர்களாக இல்லை" என்று (அறிக்கை ஆறாம்பக்கம்) குறிப்பிடுவது யாரை திருப்திபடுத்த?

ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களை பற்றி சொல்லும்போது, (அறிக்கையின் பக்கம் 6 பத்தி - 4) "கல்வியறிவு இல்லாத பாமர மக்கள் தங்கள் தலைவர்களின் பேச்சாற்றலால் எளிதில் கவரப்படுகிறார்கள் அந்த தலைவர்கள் தங்களின் சுய இலாபத்திற்காக பயன்படுத்தி கொள்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

கொடியங்குளம் கலவரம் குறித்து கோமதி நாயகம் அறிக்கை பரிந்துரை என்ற பெயரில் "எந்த ஒரு சமுதாயமாக இருந்தாலும் அதற்கு சாதி ரீதியாக வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் உடன் நீக்கப்பட வேண்டும் என சொல்வது" சமூக நீதிக்கு எதிரானது.

இக்கலவரங்கள் நடைபெற்றது செயலலிதா ஆட்சியில் ஆணையம் அமைக்கப்பட்டது. செயலலிதா ஆட்சியில் ஆணையத்தின் அறிக்கை வைக்கப்பட்டதும் செயலலிதா ஆட்சியில் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வறிக்கையை சட்டமன்றத்தில் வைத்த தி.மு.க. அரசு காவல் துறை அத்துமீறல்கள் எதுவும் இல்லை என்றும் துப்பாக்கி சூடு சரியானதே என்றும் ஆணையம் சொல்லுவதே ஏற்பதாக கூறுவதன் இரகசியம் என்ன? வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் செயலலிதா ஆட்சியைக் குறை கூறும் முதல்வர் கருணாநிதி இப்பிரச்சினையில் அதற்கு மாறாக நடந்து கொண்டதற்கு உள் நோக்கம் உண்டு.

தென் மாவட்டங்களில் தேவர் சமூக வாக்குகளை கவர்ந்தால் தான் 2001- ல் வரும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று தி.மு.க. கணக்கிட்டுள்ளது. தாமிரபரணி படுகொலைக்குப் பின்னால் இருக்கிற நோக்கமும் அதுதான்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை வேண்டும். கோமதி நாயகம் அறிக்கையை குப்பையில் போட வேண்டும். மறு விசாரணைக்கு உத்தரவு இட வேண்டும்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# புதிய நூற்றாண்டும் பழைய சட்டையும்

- பட்டியூர் பாவலர்

கி.பி. 2001 ஐ உலகம் உவகையோடு எதிர்பார்க்கிறது. பேரண்ட இயக்கத்தில் இருபதாம் நூற்றாண்டு, இருபத்தோராம் நூற்றாண்டு என்பதெல்லாம் ஒன்றுமில்லை. கிருஷ்ணர் பிறந்தாரா, கிறிஸ்து பிறந்தாரா என்பதைப் பற்றியெல்லாம் பேரண்ட இயக்க விதிகளுக்குக் கவலையில்லை.

ஆனால், மனித குலம் தனது விருப்பத்திற்கும் வசதிக்கு மேற்ப வகுத்துக் கொண்ட ஆண்டு வரிசை, வெறும் கணக்கு மட்டுமல்ல. கிழித்தெறியப்படும் நாட்காட்டிச் சீட்டுகள் மட்டுமல்ல. ஆண்டு வரிசை என்பது வரலாற்றை அச்சுப்பதிக்கும் வார்ப்பு வடிவங்களாக மாறிவிடுகிறது.

புதிய நூற்றாண்டில், புதிய புதிய எதிர்பார்ப்புகளை மனம் நாடுகிறது. இருபத்து ஓராம் நூற்றாண்டில், தமிழ்த் தேசியம் கொடிகட்டி ஆளும்; தமிழ் ஈழம் பிறக்கும் என்று தமிழர்களின் எதிர்பார்ப்பு உள்ளது. உலகம் உவகையோடு இருபத் தோராம் நூற்றாண்டை எதிர்பார்க்கும் போது, தமிழகத் தேர்தல் கட்சிகளுக்கு அது திகிலூட்டுவதாக உள்ளது. காரணம், தமிழக சட்டப்பேரவைக்குரிய 12-வது பொதுத் தேர்தல் கி.பி.2001 ல் வருவதே!

ஐந்தாண்டுகளுக்கொரு முறை தேர்தல் என்பது மாறி அதற்குள்ளேயே பல தேர்தல்கள் வருவதால், நாற்காலிக் கூட்டணிகள் ஐந்தாண்டுகள் கூட நிலைப்பதில்லை. புற்றீசல் வாழ்நாள் ஒருநாள்தான் என்பது போல தேர்தல் கூட்டணியின் வாழ்நாள் ஒரு தேர்தல் மட்டுமே என்று ஆகியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தி.மு.க. அணி, அ.இ.அ.தி.மு.க அணி இரு அணிகள் மட்டுமே நடைமுறையில் இருக்கின்றன. இவ்விரு அணிகளும் கொள்கை மாறுபாடுகளால் தனித்து முகாம் அமைக்கவில்லை. முதலமைச்சர் நாற்காலிக்கு தி.மு.க.வும் அ.இ.அ.தி.மு.கவும் போட்டியிடக் கூடிய சக்தி பெற்றிருப்பதால், இவ்விரு கட்சிகளும் தனித்தனி முகாம் அமைக்கவேண்டிய இட நெருக்கடியில் இருக்கின்றன.



பிரதமர் நாற்காலிக்குப் போட்டியிடும் சக்தி இவ்விரு கட்சிகளுக்கும் இல்லாததால், இவை காங்கிரசோடும், பா.ஜ.க. வோடும் மாறி மாறிக் கூட்டணி வைக்கும் 'கொள்கை அகலம்' கொண்டிருக்கின்றன. அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. நிரந்தரப் பகைவனும் இல்லை என்ற 'தாவல் தத்துவம்' ஒன்றையும் இக்கட்சிகள் வைத்துள்ளன.

பச்சோந்தி அரசியல் இவ்வாறு பரவிக் கிடப்பதால் எந்தக் கட்சிக்கும் ஆதரவாகப் புதிய பாய்ச்சல் எதுவும் மக்களிடம் இல்லை. 'கல்லானாலும் கட்சி புல்லானாலும் தலைவர்' என்று நவீன நளாயினிகளாக இருக்கும் விசுவாச ஊழியர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் உண்டு. காலம் காலமாக நாங்கள் இந்தச் சின்னத்திற்குத் தான் வாக்களிப்பது வழக்கம் என்று கூறுபவர்கள் உண்டு. செவ்வாய் தோஷம் என்பது போல இவர்களுக்கும் 'சின்ன தோஷம்'. இவர்களுக்கும் மேலே கள்ள வாக்குகளைக் குவிக்கும் விற்பன்னர்கள் உண்டு. மேற்கண்டவர்கள் தான் இன்றைய ஜனநாயகத்தின் தூண்கள்!

புதிதாகப் பொதுமக்களை சுண்டி இழுக்கக் கூடிய காந்தக் கற்கள் போன்ற கொள்கைகள் இல்லாத காரணத்தால், அந்தந்தக் கட்சிக்கும் உரிய 'வாக்குத் தீவுகளை' இணைப்பதன் மூலமே வாய்ப்புப் பரப்பை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் என்ற வரம்பு கிட்டத்தட்ட எல்லாத் தேர்தல் கட்சிக்கும் இருக்கிறது. இதனால் கொள்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இக்கட்சிகள் கூட்டணிகளைப் பற்றிக் கவலைப்படுகின்றன.

இப்பொழுது கூட்டணி பற்றி அதிகம் கவலைப்படுபவர் கலைஞர் கருணாநிதி. மூன்றாவது அணி

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

அமைத்த மூப்பனார் தோல்வி வெள்ளத்தில் மூழ்கிப் போனதால் கரையேற அ.இ.அ.தி.மு.க. அணியை நாடி நீந்திக் கொண்டிருக்கிறார். கடந்த மக்களவைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. தோல்வியுற்றது எனினும் முற்காலங்களில் தி.மு.க சந்தித்த படுதோல்வி நிலை அல்ல. தி.மு.க. அணி வெற்றி பெற்ற இடங்களிலும் வாக்குகள் வித்தியாசம் பல தொகுதிகளில் குறைவு.

த.மா.கா. விடுதலைச் சிறுத்தைகள் போன்ற அமைப்புகள், அ.இ.அ.தி.மு.க. அணியுடன் சேர்ந்துவிட்டால் அவ்வணியின் வலு கூடும். மின்கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, அரிசி விலை உயர்வு ஆகியவற்றாலும் மற்ற காரணங்களாலும் அதிருப்தியுற்றுள்ள மக்கள் - கடந்த முறை வாக்களித்தவர்களில் குறிப்பிட்ட அளவினர் இந்த முறை தி.மு.க.வுக்கு வாக்களிக்காமல் போகலாம்.

இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்து, இப்போது தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் சில அவ்வணியிலிருந்து விலகி அ.தி.மு.க. அணியில் சேரலாம். அப்படி ஓர் உடைப்பு நேர்ந்தால் முதலில் வெளியே போகக்கூடிய கட்சியாகப் பாட்டாளி மக்கள் கட்சி இருக்கும் என்று தி.மு.க. வட்டாரங்கள் ஐயுறுகின்றன. இவற்றையெல்லாம் சமாளிக்க கலைஞர் வியூகம் வகுத்துக் கொண்டிருக்கிறார் என்றும் அவ் வட்டாரங்கள் கூறுகின்றன. கலைஞர் கருணாநிதி காங்கிரஸ் கூட்டணிக்கும் முயற்சிக்கக் கூடும்.

கலைஞர் எவ்வளவு காலத்திற்குத்தான் இப்படி நாற்காலிச் சதுரங்கம் ஆடிக்கொண்டிருப்பார்? அவருக்கும் வயதாகி விட்டது. முதுமைக் களைப்பும் தெரிகிறது. என்ன சாகசம் செய்தாலும் 2001 -ல் ஆட்சியைத் தக்கவைப்பது அரிதாகத் தெரிகிறது.

கடைசி காலத்தில், அவர் பெயர் நிலைக்கும் படி தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் ஆதரவாக புதிய நிலைபாடுகள் எடுத்து அவற்றுள், செய்ய முடிந்தவற்றைச் செய்து எஞ்சியவற்றுக்கு மக்களைத் திரட்டும் பணியில் ஈடுபடலாம். இதனால் தி.மு.க.வின் அடித்தளம் விரிபடவும் அதன் ஈர்ப்பு விசை கூடுதலாகவும் வாய்ப்பு உண்டு.

தி.மு.க. விற்கென்று ஒரு தமிழ் முகம் உண்டு. தமிழ் மொழிக் கென்று அது தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இயக்கம் என்று கருதி, அந்தக்காலத்தில் அதில் சேர்ந்த இளைஞர்கள், இப்போது, தங்கள் முதுமையில் ஏமாற்றத்தை மட்டுமே சுமந்து நொந்து கிடக்கிறார்கள். தி.மு.க. வின் தமிழ் முகம், அரிதாரம் பூசப்பட்ட ஒப்பனை முகமோ என்று இந்தக் கால, உணர்வுமிக்க தமிழ் இளைஞர்கள் ஐயப்படுகிறார்கள்.

1967 - ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. இந்நேரம் தமிழ் மொழியைப் பல்கலைக்கழக முனைவர் பட்டம் வரை பயிற்று மொழியாக்கியிருக்கலாம். குறைந்தபட்சம், தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கற்பது கட்டாயம் என்றாவது சட்டம் செய்திருக்கலாம். 1967-க்குப் பிறகுதான் மூன்று அகவை மழலையர்க்கும் ஆங்கிலப் பள்ளிகள் கிராமங்கள் உள்ளிட்டு முளைத்தன.

தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் கடந்த ஏப்ரல் 25 ஆம் நாள் தொடங்கிய 102 தமிழ் உணர்வாளர்களின் சாகும்வரையிலான பட்டினிப்போரில், தமிழக அரசு எழுதிக் கொடுத்த உறுதி மொழிப்படி மோகன்குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரை, தமிழ் உணர்வாளர்களுக்கு மன நிறைவளிக்க வில்லை யென்றாலும், உச்சிக்குப் போக முதல்படி தரையில்தானே இருக்கும் என்ற அளவில் அதை வரவேற்றார்கள். அக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்று ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் இருப்பது.

இப்பரிந்துரையை வரும் கல்வியாண்டு தொடங்கி மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றலாம் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மூன்றாண்டு அவகாசம் ஏன்? தமிழில் பெயர்ப்பலகை வைப்பதற்கு ஆறுமாதம், ஓராண்டு என்று தவணை கொடுத்து அத்தோடு போனதே அத்திட்டம். மோகன்குழு பரிந்துரைக்கும் அதே கதி, அதோ கதிதானா?

பாரதிய ஜனதாவோடு கூட்டுச் சேர்வதற்கு முன்பே. தமிழ் நாட்டில் பார்ப்பனிய அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் தங்கு தடையில்லாமல் செயல்பட அனுமதித்து வந்தது. தி.மு.க. ஆட்சி, வகுப்புக் கலவரங்களைத் தூண்டும்படி பேசும் இந்து முன்னணி கூட்டங்களுக்குத் தடையில்லை. தமிழ் மொழி உரிமை தமிழர் உரிமை என்று பேசும், தமிழ்த் தேசிய அமைப்புகளின் கூட்டங்களுக்குத் தடை.

மனித வளத்துறை, தகவல் ஒலிபரப்பு, உள்துறை ஆகிய முக்கிய மூன்று துறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பா.ஜ.க தொலைநோக்கோடு, இந்துத்துவா சக்திகளை பல்வேறு நிறுவனங்களில் நுழைத்து வருகிறது. வரலாற்று ஆய்வுக் கழகம் (ICHR) சமூக அறிவியல் மையம் (ICSSR) போன்றவை பார்ப்பனிய மயமாக்கப்படுகின்றன. ஆரியர்கள் இந்நாட்டின் தொல்குடிகள் என்றும் இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலிருந்து கிளைத்தவை என்றும் இவ்வமைப்புகள் வரலாற்றைத் திரிக்க உதவுகின்றன. இது பற்றி ஒரு வார்த்தை கண்டித்து கலைஞர் பேசியதுண்டா? பிரசார் பாரதியிலிருந்து ரொமிலா தாப்பர் என்ற இந்துத்துவா எதிர்ப்பு அறிஞர் நீக்கப்பட்டதைத் தி.மு.க. கண்டித்ததா?

டாக்டர் மைத்ரேயன் என்பவர் பா.ஜ.க.விலிருந்து நீக்கப்பட்டு அ.தி.மு.க. வில் சேர்ந்தார். தி.மு.க வுடன் பா.ஜ.க கூட்டணி சேர்ந்ததை எதிர்த்ததற்காகவே மைத்ரேயன் நீக்கப்பட்டார். சென்னை ஐ.ஐ.டியின் ஆட்சிக் குழுவில் (Board of Governers) இதே மைத்ரேயன் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளார். மைத்ரேயனின், இந்துத்துவா சார்பு காரணமாகவே இந்திய அரசு அவருக்கு இவ் வாய்ப்பை வழங்கியுள்ளது. தி.மு.க. இதை எதிர்த்ததா?

தி.மு.க. வின் முன்னாள் அமைச்சர், இப்போதைய சங்கரன்கோயில் நகராட்சித் தலைவர் எஸ். தங்கவேல் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாமில் பங்கெடுத்துக் கொண்டது

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

மட்டுமின்றி ஆர்.எஸ்.எஸ் பாணியில் நாஜி வணக்கத்தையும் (Nazi salute) செய்தார். இப்புகைப்படம் இதழ்களில் வெளியானது. (Outlook 6.12.99)

கழகத்தினர் தீ மிதிப்பதையும், பொட்டுவைத்துக் கொள்வதையும் கடிந்து பேசிய கலைஞர் ஆர்.எஸ். எஸ் சகாவில் தங்கவேல் கலந்து கொண்டதை ஏன் கண்டிக்கவில்லை? ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் முரண்படவேண்டாம் என்ற அரவணைப்பா?

கலைஞர் கருணாநிதியின் ஆர்.எஸ்.எஸ் ஆதரவு அணுகுமுறையால், அவரது அடித்தளம் மேலும் அரிக்கப்படும். புதிய ஆதரவு இந்துத்துவா சக்திகளால் வரப் போவதில்லை.

இப்போதாவது தி.மு.க.வும் அதன் தலைவரும் தங்களது பார்ப்பனிய ஆதரவு நிலைபாட்டினை மறு ஆய்வு செய்து, தமிழ்த் தேசியத்தின் பக்கம் நின்றால் அவர்களுக்கும் நல்லது தமிழகத்திற்கும் நல்லது.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட, நளினி, முருகன், சாந்தன் பேரறிவாளன் நால்வருக்கும் மரணதண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று உலகமே குரல் கொடுக்கிறது. சோனியா காந்தியே இவ்வாறு குறைக்க பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து விட்டார். ஆனால் 'தமிழினத் தலைவர்' எத்தனை பல்டி அடிக்கிறார்! பம்மிப் பதுங்குகிறார்!

சந்திரிகா கையெழுத்துப்போட்டு தமிழ் ஈழத்தை பிரித்துக் கொடுத்தால் கலைஞர் கருணாநிதி மகிழ்ச்சியடைவாராம். தமிழினத்தின் மூத்த தலைவர் ஒருவர் இப்படிச் சொல்வது வெட்கமில்லையா?

இதே பாதையில் தி.மு.க. தொடர்ந்தால், 2001 -ல் தோல்வி மட்டுமல்ல; அது கேவலமான வீழ்ச்சியாக இருக்கும். இனியாவது தமிழ்த் தேசியத்தின் பக்கம் நின்றால் அவருக்கு ஆதரவு சக்திகள் பெருக வாய்ப்புண்டு. அல்லது 2001- ல் தோற்றாலும் மரியாதையாவது மிஞ்சும்.

### திசம்பர் 25 - வெண்மணி நாள்

*1968 திசம்பர் 25, கீழத் தஞ்சை வெண்மணி கிராமத்தில் சாதி ஆதிக்க வெறியர்களால் 44 தாழ்த்தப்பட்ட மக்கள் உயிரோடு எரிக்கப்பட்ட நாள்*

வெண்மணியின் வெந்தனலில் மாண்டவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் கொடியேற்றுங்கள்; தெருமுனைக் கூட்டங்களை சிறப்பாக நடத்துங்கள்.

தீண்டாமையை வேரறுப்போம். சாதி ஆதிக்கம் தகர்ப்போம். நிலக்கிழமை சாய்ப்போம். தமிழர் ஒற்றுமை வளர்ப்போம்.

## தன்னுரிமை

- மோசிக்கீரன்

**{தன்னுரிமை என்ற சொல்லாடல் குறித்த விவாதத்தின் பகுதியாக இக்குறிப்பு வெளியிடப்படுகிறது (ஆ-ர்)}**

தன்னுரிமை என்னும் சொற்றொடர் த.தே.பொ.கட்சியின் தேசிய இனம் பற்றிய நூல்களில் வழங்குகிறது. அத்தொடர் 'தன் அரசைப்பற்றி முடிவு செய்து கொள்ளும் உரிமை' என்ற பொருளில்தான் வருகிறது. புரிந்து கொள்ளப்படுகிறது.

ஆட்சியியலில் the right of Nations to self determination (தேசங்களின் சுய நிர்ணய உரிமை) என்னும் பெயர்த் தொடர் வழங்குகிறது. இத்தொடரில் வரும் self - determination என்னும் கூட்டுச் சொல் பொருண்மை ஆய்வுக்குரியது. இக்கூட்டுச் சொல்லில் self என்னும் முதல் பகுதி செயப்படுபொருளாகச் செயல்படுகிறது, கர்த்தாவாக அல்ல. இச்சொல் பின்வரும் , உள்ளார்ந்த வாக்கியத்திலிருந்து வருவிக்கப்படுகிறது : Nation determines itself பொருண்மை இடமாற்றத்தின் மூலம் itself என்னும் தற்சுட்டு மறு பெயர் Its polity என்னும் பொருள் தருகிறது. இம்மறுபெயரைப் பதிலீடு செய்தால் மேற்கண்ட வாக்கியம் இவ்வாறு இருக்கும் Nation determines its polity. இவ்வாக்கியத்தின் பெயராக்கந்தான் Self - determination என்னும் கூட்டுச் சொல். The right of Nations என்பதும், to என்னும் முன்னுருபும் நேர்ப்பொருள் உடையவை, விளக்கம் தேவையில்லை.

தன்னுரிமை என்பது தனித்துறை சார்ந்த சுருங்கிய தொடர். பொருள் விளக்கத்தின் மூலம் அதன் விரிந்த பொருள் விளங்குகிறது. துறை சார்ந்த சொல் உருவாக்கம் பற்றிய விவாதம் எழுவது இயல்பானது, வரவேற்கத்தக்கது.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்மருத்துவம்

## சளி நீக்கும் உணவுகள்

| நோய்கள் | உணவுகள் |
|---|---|
| இழுப்பு | ஓமரசம் |
| இரத்தம்(சளியில்) | இம்பூரல் டீ |
| காசம் | தூதுவ்ளங்காய்வற்றல் |
| தும்மல் | தூதுவளையிலைத் துவையல் |
| குளிர்தாங்கமுடியாமை | இஞ்சி டீ |
| நீர்க்கோர்வை | முசுமுசுக்கை ரசம் |
| கடும்சளி | கோவைக்காய் வற்றல் |
| சதாசளி | சுண்டைக்காய் வற்றல் |
| சளிவாந்தி | மணித்தக்காளிக்காய்வற்றல் |
| டான்சில் வாந்தி | வல்லாரைத் துவையல் |
| தொண்டை கட்டு | தூதுவளை ரசம் |
| சளி தலைவலி | உத்தாமணித்துவையல் |
| சளி பசியின்மை | பிரண்டைத்துவையல் |
| சளி தோல்நோய்கள் | ஓமவல்லி பஜ்ஜி |

## தலைவலி நீக்கும் உணவுகள்

| நோய்கள் | உணவுகள் |
|---|---|
| சளித்தலைவலி | இட்லி கொள்ளு மிளகாய்ப்பொடி |
| மலச்சிக்கல் | இஞ்சித்துவையல் |
| குடல்புண் | அகத்திக்கீரை சாறு (சூப்) |
| அதிக இரத்தக்கொதிப்பு | முருங்கைக்கீரை சாறு (சூப்) |
| மாதவிடாய் வர | பப்பாளிக்கூட்டு |
| மாதவிடாய் காலதாமதம் | பொன்னாங்கண்ணிகீரை கூட்டு |
| சைனஸ் | தூதுவளை அடை |
| காசநோய் | முசுமுசுக்கையிலை இட்லி |
| மண்டை நீர் | வேளைச்செடி ரசம் |
| மண்டை கட்டி | காவாளை இலைத்துவையல் |
| வலிப்பு | வெண்தாமரைப்பூ காபி |
| சுரம் | மிளகுரசம் |
| தூக்கமின்மை | சேமியாபாயாசம் |
| மண்டையில் அடிப்பட்டால் | முள்முருங்கையிலை அடை |
| நீர்கடுப்பு | ஆவாரம்பூ டீ |
| புகை விஷம் | துளசி டீ |
| அதிக கவலை | ஏலக்காய் காபி |

- மூலிகை மருத்துவ நிபுணர்
ஜி.மாணிக்கவாசகம்
அஞ்சலகம் அருகில்
தேவூர் - 611 109
நாகை மாவட்டம்

## போதைப் பாக்கு பான்பராக்கை தடை செய்! விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள்

தாடைப்புற்றுநோய், ஆண்மைக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, கருப்பைக் கோளாறு உள்ளிட்ட கொடிய நோய்களை உருவாக்கும் பான்பராக் (குட்கா) உள்ளிட்ட போதைப்பாக்குகளை தடை செய்யக் கோரி டிசம்பர் 16-ல் கோத்தாரி நிறுவன முற்றுகைப் போராட்டத்தை தமிழக இளைஞர் முன்னணி அறிவித்திருந்தது. இப்போராட்டத்தை விளக்கி த.இ.மு. சார்பில் விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

**செங்கிப்பட்டி**

25.11.99 மாலை செங்கிப்பட்டியில் தோழர் தமிழ்ச் செல்வன் (பூதலூர் ஒன்றிய தலைவர், த.இ.மு.) தலைமையில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கி.வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர், த.தே.பொ.க.) குழ.பால்ராசு (மாவட்டச் செயற்குழு, த.தே.பொ.க.) ரெ. கருணாநிதி (மாவட்டச் செயற்குழு, த.தே.பொ.க.), காமராசு (ஒன்றியச் செயலாளர், த.இ.மு.) ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

**தஞ்சை – கீழவாசல்**

26.11.99 வெள்ளி மாலை தஞ்சை கீழவாசல் பகுதியில் தோழர் கு. முனியமுத்து (தஞ்சை ஒன்றிய செயலாளர், த.இ.மு.) தலைமையில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கி. வெங்கட்ராமன் சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் நா.வைகறை (பொதுச் செயலாளர், த.இ.மு.), இரா.சு. முனியாண்டி (தஞ்சை நகரச் செயலாளர், த.இ.மு.) ஆகியோர் உரையாற்றினர்.

**தஞ்சை – பழைய பேருந்து நிலையம்**

தோழர் ப. சந்திரசேகர் (நகரத் தலைவர், த.இ.மு.) தலைமையில் 27.11.99 மாலை தஞ்சை பழைய பேருந்து நிலையத்தில் விளக்கத் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கி.வெங்கட்ராமன், நா.வைகறை இரா.சு. முனியாண்டி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# வெற்றியைக்குவித்து வரும் ஓயாத அலைகள்

**- வடமலை**

புலிப்படையின் ஓயாத அலைகளில் சிக்கி சிங்களத் தலைமை திக்குமுக்காடுகிறது. வவுனியா, மணலாறு, மன்னார் ஆகிய மூன்று முனைகளிலும் ஒரே நேரத்தில் விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதல்களில் சிங்களப் படை சிதறி ஓடியது. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களப் படையாட்கள் பலியாயினர். ரூ.500 கோடி பெறுமதியான ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர். ஒன்பது நகரங்கள் புலிகள் வசம் மீண்டது.

இந்த ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் காலை 11 மணி 20 நிமிடம் அளவில் தொடங்கப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கைக்கு "ஓயாத அலைகள் - 3" என்று விடுதலைப்புலிகள் பெயரிட்டுள்ளனர். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நேரடித் தலைமையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



**ஓயாதஅலைகளில் வீழ்ந்த ஹெலிகாப்டர்**

ஓயாத் அலைகள் -3 ன் போது சிங்கள அரசின் எம்.ஐ.17வகை ஹெலிகாப்டர் ஒன்று புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இது தவிர எம்.ஐ.17, எம்.ஐ.24 ஆகிய இரண்டு ஹெலிகாப்டர்கள் கடும் சேதத்திற்கு உள்ளாயின.

இதற்கு முன் நடந்த "ஓயாத அலைகள் -1" முல்லைத் தீவை மீட்டது. அத்துடன் நேரடிப் படையணிகள் மோதலில் மிகப்பெரிய பாய்ச்சலாகவும் அது அமைந்தது. அதற்கடுத்து நடந்த "ஓயாத அலைகள் -2" கிளிநொச்சியை மீட்டது. இப்போது நடக்கும் "ஓயாத அலைகள் -3" இதுவரை நடந்திராத மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கையாகும்.

ஓட்டுசுட்டான் படைத்தளத்தின் முன்னணி காவலரண் பகுதி மீது சரமாரியாக நடந்த எறிகணை வீச்சின் மூலம் "ஓயாத அலைகள் -3" தமது ஆர்ப்பரிப்பைத் தொடங்கியது. ஓட்டுசுட்டான் - மாங்குளம் சாலையில் படைமுகாம்களில் இராணுவத்தினரும், கடற்படையினரும் நிலைகொண்டிருந்தனர். கடற்படையின் மூன்றாவது விஜயபாகு பிரிவு அங்கு முகாமிட்டிருந்தது. விடுதலைப்புலிகளின் கடுமையான எறிகணைத் தாக்குதல்கள் இப்படை முகாமின் மீது நடந்து கொண்டிருக்கும்போதே, கெருடாமேடு, குமுழமுனை, கோடாலிக்கல்லு போன்ற பகுதியினூடாக பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு அணி அணியாக விடுதலைப் புலிகள் உள்ளே நுழைந்தனர். சிறு சிறு அணிகளாக வந்து புலிகள் தொடுத்த தொடர்த் தாக்குதலை எதிர்க்க முடியாமல் கடற்படையினர் பின்வாங்கினர். இரண்டு மணி நேரத்தில் ஒட்டுசுட்டான் நகர் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஒட்டுசுட்டானில் நிலைபெற்றதற்குப் பிறகு, நெடுங்கேணி நோக்கி புலிகள் முன்னேறினர்.

நெடுங்கேணியைத் தக்க வைக்கும் நோக்கோடு லெப்டினன்ட் ஜெனரல் சிறீலால் வீரசூரியா வன்னிப்படைத் தலைமையகத்திற்கு விரைந்தார். அவர் வரும் முன்பே நெடுங்கேணியின் இராணுவ வலையத்தை ஊடறுத்து புலிப்படை வெகுதூரம் முன்னேறியிருந்தது. நெடுங்கேணிபுலிகள்வசமானது.

விடுதலைப் புலிகளின் படையணிகள் ஒட்டு சுட்டான், நெடுங்கேணிப் பகுதிகளை வெற்றி கொண்டு, முன்னேறிக் கொண்டிருந்த அதே வேளை, மற்றுமோர் புலிஅணி திடீரென்று அம்பகாமம், ஒலிமேடு, மாங்குளம்இராணுவ முகாம்களின் மீது தாக்குதல் தொடுத்தது. சிங்களப்படை சிதறி ஓடியது.

அதே நேரம் இன்னொரு படையணி கனகராயன்குளம்

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்


www.padippakam.com

படை முகாம்மீது கடும் தாக்குதலை மேற்கொண்டது. 'இது பெரிய முகாம் என்பதால் தாக்குதலும் தீவிரமாக இருந்தது. அம்முகாமிலிருந்த எட்டுக்கும் மேற்பட்டகட்டடங்கள்தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டன.

அடுத்து புளியங்குளம் படைத்தளமும் வீழ்ந்தது.

"ஓயாத அலைகள் - 3" நடவடிக்கையில் முதற்கட்டமாக புலிப்படையணிகள் இரண்டு முனைகளின் ஊடாக முன்னேறியிருந்தன. இவ்வணிகள் புளியங்குளத்தில்மூன்று பிரிவாகப் பிரிந்து அடுத்த கட்டத் தாக்குதல்களைத் தொடர்ந்தன

ஓரணி கீழ் நோக்கி, ஓமந்தை, தாண்டிக்குளம் பகுதிகளை வென்று வவுனியா நோக்கி முன்னேறியது. அடுத்த அணி ரண கோஷா படைப்பகுதிகளைத் தாக்கியது. இன்னொரு அணி மணலாறுப் பகுதியில் முன்னேறி, தனிக்கல், கென்பாம், சிலோன் தியேட்டர் ஆகிய இடங்களிலுள்ள சிங்கள இராணுவ முகாம்களை வீழ்த்தியது.



மணலாற்றுப் பகுதியில் வெலி ஓயா என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட கட்டாயக் குடியேற்றத்தின் மூலம் வந்த சிங்களர்கள் கிராமங்களைக் காலி செய்து ஒட்டுமொத்தமாக வெளியேறி விட்டனர்.

**கடந்த மூன்றாண்டுகளாக பல ஆயிரம் படையாட்களை பலி கொடுத்து, பல நூறு கோடி ரூபாய் ஆயுதங்களை அழித்து சிங்களர்கள் கைப்பற்றிய சுமார் 1500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை ஆறே நாட்களில் விடுதலைப்புலிகள் மீட்டுள்ளனர்.**

சிங்களப் படையினர் 'சொல்லாமல் கொள்ளாமல்' தங்கள் சொந்த ஊருக்கு மூட்டை கட்டி வருகின்றனர். விடுப்பில் சென்ற, இராணுவத்தினரின் விடுப்பை ரத்து செய்து, அவர்களை முகாமிற்கு வருமாறு படைத் தலைமை' ஆணையிட்டாலும் பெரும்பாலோர் வர மறுக்கின்றனர். முகாம்களிலிருந்து தப்பியோடும் இராணுவத்தினரை இராணுவக் காவலர்கள் சுற்றி வளைக்கிறபோது, இராணுவத்தினர் அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு ஓட்டம் பிடிக்கின்றனர். சிங்களப் படையாட்களின் மன உறுதி உடைந்து, நொறுங்கியுள்ளது.

**இது சிங்கள அரசிற்கு மிகப்பெரும் அதிர்ச்சி அளித்துள்ளது. உலகம் முழுதும் உள்ள இராணுவ- அரசியல் நோக்கர்கள் வியப்போடு பிரபாகரனின் படை நகர்வுகளைக் கூர்ந்து நோக்கி வருகின்றனர்.**

வரும் டிசம்பர் 27 - ஆம் நாள் ஸ்ரீலங்காவில் குடியரசுத் தலைவர் தேர்தல் நடக்க இருக்கிற நிலையில், இந்தத் தோல்வி சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கி விட்டது.

இதனை சந்திப்பதற்காக எல்லா வழிகளையும் அவர் மேற்கொள்ளத் தொடங்கி விட்டார். இத் தோல்விக்குத் தாமோ, பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவோ பொறுப்பல்ல என்று தட்டிக் கழிப்பதற்காக, இத் தோல்வி குறித்து ஆராய ஒரு குழுவை நியமித்துள்ளார். வன்னிப் படைகளுக்குத் தலைமை வகித்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா மற்றும் அவர் கீழ் பணியாற்றிய ஐந்து உயர் அதிகாரிகள் 55-ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர்

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

கே- போரான் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தோல்வி, பிரபாகரனும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமம் சிங்கேயும் சேர்ந்து செய்து சதியின் விளைவு என்று பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிற ர் சந்திரிகா. பத்திரிக்கைத் தணிக்கை கொண்டு வரப்பட்டு, களச் செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன.

பதிலுக்கு, ரணில் விக்கிரம சிங்கே, களத்தில் இராணுவம் அடைந்துள்ள படுதோல்வியை வெட்ட வெளிச்சமாக்கி வருகிறார். சந்திரிகாவைக் கைது செய்து பிரபாகரனிடம் ஒப்படைப்பேன் என்றார். அண்மையில் வெளிநாட்டு பத்திரிகையாளர்களிடம்

## வீரச்சாவு

**ரூ.500 கோடி மதிப்புள்ள படைக்கலங்கள் புலிகள் வசம் சிக்கின. பலவகை போர் டாங்கிகள், கவசவாகனங்கள், நீண்டதூர எறிகணைகள், மோட்டார்கள், ஜீப்புகள், பலநூறு கனரக ஆயுதத்தளவாடங்கள் ஆகியன இதில் அடங்கும்.**

**இத்தாக்குதலில் 119 புலிகள் வீரச் சாவடைந்துள்ளனர்.**

பேட்டி அளித்த ரணில் விக்கிரமசிங்கே "மூன்றாவது நாட்டின் சமரசத்தை ஏற்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவேன். இதற்கு இந்தியாவின் சம்மதத்தைப் பெறுவேன். வடக்கு - கிழக்கு பகுதியை இரண்டு ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பேன். இலங்கை இராணுவத்தில் புலிகளையும் சேர்த்துக் கொள்வேன்" என்று அதிரடி அறிவிப்புகளைச் செய்தார்.

உடனேசந்திரிகாவும், புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்று அறிவித்துள்ளார்.

இவ்வாறு, 'ஓயாத அலைகள் - 3' சிங்கள அரசியலில் மிகப் பெரும் அதிர்வு அலைகளை உண்டாக்கி வருகிறது.

தமிழீழச் சிக்கலை இராணுவ வழியில் தீர்த்து விட முடியாது என்பதை கொஞ்சமும் ஐயத்திற்கு இடமின்றி 'ஓயாத அலைகள் - 3' மெய்ப்பித்துள்ளது.

இனியாவது சிங்கள வெறியர்கள் உண்மை நிலையை உணர்ந்து தமிழீழச் சிக்கலுக்கு நீதியான, நிலைத்த தீர்வுகாண முன் வரவேண்டும். ஈழத் தமிழர்களின் இறையாண்மையை அங்கீகரிக்க வேண்டும்.♦

## தொண்டமானுக்கு அஞ்சலி



இலங்கை தமிழ்த் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மாபெரும் தலைவரும், இலங்கை அமைச்சருமான திரு.செளமிய மூர்த்தி தொண்டமான் 30.10.1999 அன்று மறைந்தார் என்ற செய்தி, தமிழ் இன உணர்வாளர்களைப் பதை பதைக்கச் செய்தது.

தமிழக வம்சாவழித் தமிழர்களான மலையகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். அவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது கொதித்தெழுந்தார்.

சிறிமாவோ- சாஸ்திரி உடன்பாட்டால் இலட்சக்கணக்கான தமிழர்கள் நாடற்றோராக்கப்பட்டு, அகதிகளாகத் தமிழ்நாட்டிற்குத் துரத்தப்பட்டனர்.

தொண்டமான் முயற்சியால் 10 லட்சம் மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை கிடைத்தது.

இலங்கை அரசில் அமைச்சராக இருந்தாலும், ஈழவிடுதலை போரையும், விடுதலைப் புலிகளையும் தொண்டமான் ஆதரித்தார். இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற பெறு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்திக்கவும் திட்டமிட்டிருந்தார்.

இத்தருணத்தில் தொண்டமான் காலமானது தமிழர்களுக்குப் பேரிழப்பாகும். அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

பொதுச்செயலா்
த.தே.பொ.க.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

## பெங்களூரில்
# திருவள்ளுவர் சிலை திறப்புப் போராட்டம்
## புலவர் க. சுப்பிரமணியம் அழைப்பு

அன்புடையீர்!

வணக்கம்

மொழி, இனம் நாடு முதலிய கட்டுக்களைக் கடந்து உலகப் பொதுமறையை வழங்கிய மன்பதைப் பாவலர் திருவள்ளுவரின் சிலை, கருநாடகத்தின் தலைநகராம் பெங்களூரில் கடந்த எட்டாண்டுகளாக முக்காடு போட்டு மூடிக்கிடப்பது உலகக் குறள்நேயர்கள் நெஞ்சங்களை வருத்தி வருகிறது. சிலை நிறுவக் கொடுத்த இசைவையும், பெங்களூர் மாநகராட்சி திரும்பப் பெற்றுக் கொண்டது

4,000 நன்கொடையாளரிடம் ரூ.4 இலக்கம் (இலட்சம்) திரட்டி நிறுவப் பெற்ற சிலையைத் திறக்கப் பல அமைப்புகள் போராட்டங்கள் நடத்தின. அரசு கண்டுகொள்ளவில்லை. தமிழர்களின் உழைப்பு மட்டும் வேண்டும் ஆனால், அவர்களின் கோரிக்கை மட்டும் புறக்கணிக்கப்படும்.

23.11.1997 இல் சிலைத் திறப்பு இயக்கம் உருவாகித் திருவிளக்கு வழிபாடுகள், உண்ணாநோன்பு, மனிதச் சங்கிலி, வாய்மூடிப் போராட்டம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தியது. ஆனால் அரசுதான் அறவழிப்போராட்டங்களை மதிப்பதில்லையே!

பெங்களூர் நகரத்தந்தையர், கருநாடக முதல்வர், ஆளுநர், இந்தியத் தலைமையமைச்சர், தமிழக முதல்வர் முதலான 25 அரசியல் தலைவர்கள் ஆகியோர்க்கு வள்ளுவர் சிலையைத் திறக்க வேண்டி முறையாக விண்ணப்பித்தும் பயனில்லை. நாடாளுமன்றத்தில் பொதுமேடைகளில் நமது இந்தியத் தலைமையமைச்சர் முதலானோர் மேற்கோள் காட்டிப் பேசும் உயர்ந்த குறளை - 200க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்ற குறளை - திருவள்ளுவர் உலகின் மூத்த தமிழ்மொழியில் அல்லவா எழுதிவிட்டார்? வள்ளுவரால் வாக்குக் கிடைப்பதாக இருந்தால், நான் நீ எனச் சிலையைத் திறக்க முன்வந்து இருப்பார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் மேன்மைமிகு கே. ஆர். நாராயணன் அவர்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கருநாடக அரசுக்கு ஜுலை 98இல் கடிதம் எழுதிச் சிலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியும் கூட , அரசு சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

கருநாடக அரசோ, தமிழ்ச் சிறுபான்மையோரின் கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் சிறிதும் உதவியாக இல்லை. சமநீதியும் மறுக்கப்படுகிறது.



மராட்டிய அரசு நெருக்குதல் தந்ததால், மாவீரன் சிவாஜியின் சிலை 5 ஆண்டுகளுக்குமுன் திறக்கப்பெற்றது. ஆனால், தமிழர்கள் நாதியில்லாதவர்களாயிற்றே! கேட்பாரில்லையே!

உலகமாஞானி தெய்வப்புலவர் வள்ளுவர் சிலை மூடிக்கிடப்பது நாட்டுக்கு நல்லதில்லை. பேரத்துக்கு இடமின்றி, அமைச்சர்களும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் தொண்டு நிறுவனத்தினரும் அரசியல் தலைவர்களும் வள்ளுவர் சிலையைத் தன்மானத்துடன் திசம்பர் 99க்குள் திறக்க உதவ வேண்டுகிறோம்.

இன்றேல், வருகிற 15.1.2000 காரி(சனி) மாலை 5 மணிக்குத் திருவள்ளுவர் நாளன்று திருவள்ளுவர் சிலையைத் திறக்கக் குறள் அன்பர்களும் பொதுமக்களும் அறிஞர் பெருமக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுகிறோம். இதனால் நேரும் விளைவுகளையும் எதிர்கொள்ள ஆய்த்தமாகி விட்டோம்.

உத்வுக. நன்றி.

**புறப்படும் இடம் : ஒடுக்கதக்தூர் மடம் அருகில், அல்சூர் ஏரி**

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-13

- எஸ்.வி.ராஜதுரை

அந்த ஆயுதமேந்திய கிளர்ச்சி பரந்துப்பட்ட ஐரிஷ் மக்களின் ஆதரவைப் பெறத் தவறியது தான்அதன் தோல்விக்குக் காரணம் என்பது பல மார்க்சியவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து. மக்களாதரவை அவர் மிகையாக மதிப்பிட்டிருக்கக் கூடும். ஈஸ்டர் கிளர்ச்சி நடப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பு அவர் எழுதிய கட்டுரையொன்றில், ஐரிஷ் தேசியத்திற்கு வெகுமக்கள் ஆதரவும் இசைவும் இருப்பதற்கான வெளிப்பாடுகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். முதலாம் உலகப் போர் தொடங்கிய போது 1914 ஆகஸ்டில் - ஐரிஷ் பாட்டாளிகள் உட்பட இளைஞர்கள் பலரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றுவதற்காகக் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்த போது,ஐரிஷ் தேசியத்திற்கு வீழ்ச்சியும் தலைக் குனிவும் ஏற்பட்டதாகத் தான் கருதியதைப் பொய்யாக்கும் வகையில் 1916 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்துள்ளதாக அவர் எழுதினார். ஒருபுறம் ஹோம்ரூல் இயக்கத்தினரும்நாடாளுமன்ற அரசியல்வாதிகளும் நாட்டின் ஆன்மாவை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் விலை பேசிக் கொண்டிருக்கையில் மற்றொரு புறம் ஆயுத மேந்திய ஐரிஷ் தொண்டர்களின் அணி வகுப்புகளும் அவர்களுக்கு ஆதரவாகத் திரண்ட வெகுமக்கள் கூட்டங்களும், ஐரிஷ்சமுதாயத்தின் பல்வேறுபிரிவுகளிடையே கிளர்ச்சி மனப்பான்மையும் காணப்படுவதை அவர் சுட்டிக் காட்டினார்.1916 மார்ச் 17ஆம் தேதி நடைபெற்ற ஐரிஷ் தொண்டர்படை அணிவகுப்புகள் "அயர்லாந்தின் துரோகிகளின் அத்தனை துரோகங்களையும் மீறி அயர்லாந்தின் இதயம் எப்போதையும் போலவே இப்போதும் தூய்மையானதாகவே உள்ளது. பேரரசுகள்வீழும்,கொடுங்கோன்மைகள்அழியும், நாம் மீண்டும் உயிர்த் தெழுவோம்"[149] என்றெழுதினார்.

அதற்குச்சில நாட்களுக்கு முன்பு (19.2.1916 அன்று ) மற்றொரு கட்டுரையொன்றில் எழுதினார்: "மனிதர்களிடம் உள்ள சாகச உணர்வு எப்போதும் தனக்கான வடிகாலொன்றைத் தேடிக் கொண்டே இருக்கிறது. தங்கள் சாகச உணர்வை வெளிப்படுத்த வாய்ப்பில்லாமல் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்ததாலேயே, ஐரிஷ் மக்கள், குறிப்பாக ஐரிஷ் இளைஞர்கள், இராணுவத்தில் சேர்வதை தமது சாகச உணர்வை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகக் கருதி, பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்துவிட்டனர்; ஒரு கூலிப் படைக் கொலைகாரன் அத்தகையவனாய் இருப்பதற்குக் காரணம் அவனது உள்ளார்ந்த சாகச உணர்வுதான். அந்த சாகச உணர்வை நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்குத் திருப்பிவிட நாம் முயல வேண்டும்" . அதுமட்டுமல்ல,

"புரட்சிகளை உருவாக்கும் ஆற்றல்களிலொன்றாக அதனை (சாகச உணர்வை) கருத வேண்டும். கடந்த காலப் புரட்சியாளர்கள் எப்போதுமே சாகச உணர்வு கொண்டவர்களாகவே இருந்திருக்கிறார்கள். புரட்சியாளர் உல்ஃப்டன் (Wolfe Tone) தனது குறிப்புகளில் எழுதி வைத்திருந்தார்: "வணிகர்கள் நல்ல புரட்சியாளர்களாக மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்" இந்த விஷயத்திலும்அவரது கருத்து சரியாகத்தான் உள்ளது. லாபமா நஷ்டமா என்று கணக்குப் போட்டுப்பார்ப்பது தான் ஒரு சிறந்த வணிகனின் சாரம். ஆனால் அதுதான் ஒரு நல்ல புரட்சியாளனுக்கு அழிவு ஏற்படுத்தும். ஏனெனில் நீங்கள் எவ்வளவு காலமாக உங்கள் திட்டத்தைத் தீட்டினாலும், எவ்வளவு விவேகத்துடன் உங்களது நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தாலும் எவ்வளவு மதிக் கூர்மையுடன் ஒவ்வொரு விஷயத்தையும் சிந்தித்திருந்தாலும் எதிர்பாராது ஏற்படுகிற சூழ்நிலையை சமாளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எவ்வளவு பாராட்டத்தக்க வகையில் செய்திருந்தாலும், எதிரியின் திடீர் நடவடிக்கையொன்று நமது திட்டங்கள் அனைத்தையும் வீணாக்கிவிடும், நம்மிடையே உள்ள மிக விவேகமிக்கவர்களாலும் கூட கனவிலும் நினைத்துப் பார்த்திராத மார்க்கங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்தப்படுத்தும் என்பதை புரட்சியாளன் எப்போதும் அறிந்திருக்கிறான். அத்தகையதொரு எதிர்பாராத சூழ்நிலையில் மிகத் துரிதமான சிந்தனையைத் தொடர்ந்து மிகத் துரிதமான செயல் மேற்கொள்ளப்படவேண்டும். அப்போது சாகச உணர்வு, ஆகப் பெரிய புரட்சிகரமான சொத்தாக அமையும்[150]

வெகுமக்களாதரவு, புரட்சியாளனின் சாகச உணர்வு இரண்டும் இயங்கியல் ரீதியான உறவு கொண்டவை. புரட்சியாளரின் சாகச உணர்வு என்ற அகநிலை அம்சத்திற்கு ஜேம்ஸ் கொனெல்லி மிகையான அழுத்தத்தைத் தந்து விட்டார் என்ற முடிவுக்கு நம்மை இட்டுச் செல்கின்றன அமெரிக்க் மார்க்சிய அறிஞர் ஜான் நியுஸிங்கரின் ஆய்வுகள் தரும் விவரங்கள்:

(1) ஜேம்ஸ் கொனெல்லிக்கும் ஐரிஷ் குடியரசுவாத சகோதரத்துவ அமைப்பின் (IRB) இரகசிய இராணுவக் குழுவிற்கும் (Military Council) 1916 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்பட்ட கூட்டணியின் விளைவாக உருவானது தான் ஈஸ்டர் கிளர்ச்சி. அச்சமயம் ஜேம்ஸ் கொனெல்லி IRB யின் உறுப்பினராகியிருந்ததுடன் இரகசிய இராணுவக் குழுவின் ஆறாவது உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். இவ்வாறு அவர் கடந்த காலத்தில் நிராகரித்து வந்த இரகசிய சதித் திட்ட அரசியலுக்குத் தன்னை முழுக்க ஒப்படைத்துக் கொண்டார்.

பான்பராக் தடை - கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

(2) ஈஸ்டர் கிளர்ச்சியின் போது ஐரிஷ் குடியரசுவாத சகோதரத்துவ அமைப்பில் 2000 உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் அந்த உறுப்பினர்கள் பலர் ஐரிஷ் தொண்டர் படைக்குள் (Irish Volunteers) ஊடுருவி அப்படையின் தலைமைப் பொறுப்புகளைக் கைப்பற்றியிருந்தனர். ஐரிஷ் தொண்டர் படையின் அதிகாரப்பூர்வமான தலைமைக்குத் தெரியாமலேயே ஒரு நிழல் தலைமை உருவாக்கப்பட்டிருந்தது.

(3) 1916 ஏப்ரல் 23 இல் (ஈஸ்டர் ஞாயிறு) டப்ளினில் இருந்த பிரிட்டிஷ் பாதுகாப்புப் படையுடன் ஒரு ஆயுதமேந்திய மோதலில் ஐரிஷ் தொண்டர் படையினர் ஈடுபடும்படி தூண்டிவிடுவதுதான். மேற்சொன்ன இராணுவக் குழுவின் நோக்கம். ஆனால் அந்த நோக்கம் ஐரிஷ் தொண்டர் படைத் தலைமைக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. அது மட்டுமின்றி, அந்தக் கிளர்ச்சி நடைபெறப்போகும் தருணம் வரை, அதுபற்றிய தகவல் IRB உறுப்பினர்கள் பலருக்குக் கூடத் தெரிவிக்கப்படவில்லை. IRB யின் தலைமைக் குழு உறுப்பினராக இருந்த டேனிஸ் மெக்கொல்லோ(Denis Mccullough) என்பாருக்கும் கூட என்ன நடக்கப் போகிறது என்பது ஈஸ்டர் திருநாளுக்கு ஒருநாள் முன்னர்தான் தெரியவந்தது. தலைமைக் குழுவின் இதர உறுப்பினர்களுக்கும் கூட ஓரிரு நாட்களுக்கு முன்னர்தான் தகவல் தெரிவிக்கப்பட்டது. அச் சதித் திட்டத்தை எதிர்த்த தலைமைக்குழு உறுப்பினரான பல்மெர் ஹாப்ஸன் (Bulmer Hobson) இராணுவக் குழுவின் ஆணையின்பேரில் கடத்திச் செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். பிரிட்டிஷ் உளவுத்துறையினருக்கு கிளர்ச்சிபற்றிய தகவல்கள் ஏதும் போய்ச் சேர்ந்துவிடாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான் இது என்று பின்னர் நியாயப்படுத்தப்பட்டது. உண்மையில், அத்தகைய இரகசியத் திட்டத்தை IRB யிலிருந்த செல்வாக்குமிக்க உறுப்பினர்கள் அறிந்திருந்தால் அதனை அவர்கள் கட்டாயம் எதிர்த்திருப்பர். இராணுவக் குழு "ஒரு இரகசியச் சங்கத்திலுள்ள ஒரு இரகசியச் சங்கமாக" இருந்ததாக ஹாப்ஸன் குறிப்பிட்டுள்ளார்.

(3) ஒரு இரத்தப் பலியின் மூலமே குடியரசுவாத மரபு அழியாமல் காப்பாற்றப்படும் என்ற ஒருவகை சமயவகைப்பட்ட நம்பிக்கை இராணுவக் குழுவை ஆட்கொண்டிருந்தது. கொனொல்லியும் அந்த நம்பிக்கையை பகிர்ந்து கொண்டிருந்தார். தமது வலிமை என்ன, மாற்றான் வலிமை என்ன என்பதைப் பற்றிய கவலை இல்லாமல், சண்டையில் ஆயுதங்கள் எடுத்துப் போராடி தத்தம் உயிர்களைத் தத்தம் செய்தாலே போதும், வெற்றிக்கான சாத்தியப்பாடுகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்ற எண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அத் திட்டத்தை IRB உறுப்பினர்கள் பலர் விமர்சித்தனர். வெகுமக்களின் பிரிட்டிஷ் எதிர்ப்புணர்வு வளர்ச்சி பெற்று வெற்றிக்கான உண்மையான சாத்தியப்பாடு ஏற்படுவதற்கு முன் கிளர்ச்சி நடத்தினால் அது தோல்வியடையும் என்று அவர்கள் கருதினர். ஆனால் அவர்களை ஏமாற்றி அக் கிளர்ச்சியில் ஈடுபடவைத்தது இராணுவக் குழு. அதாவது, ஐரிஷ் தொண்டர்களை ஒடுக்குவதற்கான ஏற்பாடுகளை பிரிட்டிஷார் செய்து வருவதாகக் கூறும் சில போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அவை ஐரிஷ் தொண்டர்கள் படைத் தலைமைத் தளபதி ஈய்ன் மெக்னெய்ல் (Eoin MacNeill) என்பாரிடம் காட்டப்பட்டன. அவற்றை உண்மையென நம்பிய மெக்நெய்ல், ஈஸ்டர் திருநாளன்று, ஐரிஷ் தொண்டர்கள் ஒன்று திரண்டு அணிவகுத்து வரும்படி ஆணையிட்டார். ஆனால் இராணுவக் குழுவால், தான் ஏமாற்றப்பட்டு விட்டதைப் பின்னர் தெரிந்து கொண்டதும் உடனடியாக அந்த ஆணையை இரத்து செய்தார். எனினும் இராணுவக் குழுவோ, ஒருநாள் கடந்து தன்னால் திரட்ட முடிந்த சிறு படையுடன் கிளர்ச்சித் திட்டத்தை நடத்த முடிவு செய்தது. ஏப்ரல் 24 அன்று (திங்கட் கிழமை) 700 ஐரிஷ் தொண்டர்களும் 120 குடிமக்கள் இராணுவ வீரர்களும் டப்ளின் நகரின் மையப் பகுதியை ஆக்கிரமித்தனர்.

(4) ஈஸ்டர் கிளர்ச்சிக்குப் பொது மக்கள் ஆதரவு ஏதும் இருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் பிரிட்டிஷ் படை வீரர்களுக்கு ஐரிஷ் மக்கள் உணவு வழங்கி மகிழ்ந்த நிகழ்ச்சிகளும் இருந்தன. ஹோம் ரூல் இயக்கத்தினருக்கு அன்று பரவலாக வெகு மக்கள் ஆதரவு இருந்து வந்தது. சரணடைந்த கிளர்ச்சியாளர்கள், இராணுவ, போலீஸ் பாதுகாப்புடன் டப்ளின் நகரத் தெருக்கள் வழியாகக் கொண்டு செல்லப்பட்டபோது பொது மக்கள் அவர்களைத் திட்டினர். கேலி செய்தனர். பொதுமக்களால் அவர்கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் இருந்தன.

(5) தோல்வி நிச்சயம் என்பது கொனொல்லிக்கும் தெரிந்திருந்தது. கிளர்ச்சி நடந்த அன்று காலையில் தொழிற் சங்கக் கட்டிடத்தில் அவரைச் சந்தித்த வில்லியம் ஓ பிரையன் என்ற தோழரிடம் நாம் எல்லாருமே வெட்டி சாய்க்கப்படப் போகிறோம் என்றார். "வெற்றிக்கான சாத்தியப்பாடு ஏதும் இல்லையா?" என்று ஓ பிரையன் வினவியபோது "ஏதும் இல்லை" என்று பதிலளித்தார் கொனொல்லி[151]

இந்த விவரங்களும் விமர்சனங்களும் ஆழ்ந்த கவனத்துக்கும் படிப்பினைக்கும் உரியவை. ஈஸ்டர் கிளர்ச்சி பற்றிய லெனினின் மதிப்பீட்டை மறுபரிசீலனைக்கு உட்படுத்த உதவுபவை.

(தொடரும்)

| | | |
|---|---|---|
| 149. | Ibid | The lost writings - James conolly PP 211-212 |
| 150. | Ibid | PP 199-200 |
| 151. | John Newsinger | THE EASTER REBELLION: DEFEAT OR VICTORY? |

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com



# நால்வருக்கு மரண தண்டனை.. இராமகோபாலனும், இஸ்லாமிய 'உணர்வு' இதழும் ஒன்றுபடுவது எப்படி...?

- நிகரன்

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக வெளிவந்து கொண்டிருக்கும் 'உணர்வு' என்ற வார இதழ் 1999 - நவம்பர் 5, மற்றும் 12 தேதிகளில் வந்த இதழ்களில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் நால்வருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றியே ஆக வேண்டும், அவர்களுக்கு கருணை காட்டக் கூடாது என்று வன்மையாக எழுதியுள்ளது.

வியப்பு என்னவெனில் இந்து முன்னணி இராம கோபாலனும் நால்வருக்கும் தூக்குதண்டனை நிறைவேற்ற வேண்டுமென்று கூக்குரல் இடுகிறார். இஸ்லாமிய மக்களின் உரிமைகளை பாதுகாக்க முனையும் 'உணர்வு' இதழும் நால்வரையும் தூக்கில் போட வேண்டுமென்று வாதிடுகிறது.

மேற்கண்ட நிலைப்பாட்டிற்கு ஆதரவாக 'உணர்வு' சில வாதங்களை வைத்திருக்கிறது. அவற்றைப்பார்ப்போம்.

'ஒருவன் கொல்லப்பட்டால் அவனது மனைவி, மகள், தாய், தந்தை ஆகியோர்தான் கொலையாளிக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இஸ்லாம் இப்படித்தான் கூறுகிறது. ராஜீவ் கொலையாளிகளுக்கு சோனியாவோ, பிரியங்காவோ, ராகுலோ கருணை காட்டினால் அதில் நியாயமுள்ளது. ராஜீவுக்கு எந்த வகையிலும் இரத்த சம்பந்தமில்லாத - ராஜீவ் மரணத்தால் எள் அளவு கூட பாதிப்புக்குள்ளாகாத குடியரசு தலைவர் மன்னிப்பதில் என்ன நியாயமோ' என்று கேட்கிறது 'உணர்வு'.

சோனியா காந்தி தனக்கோ, தன் பிள்ளைகளுக்கோ, மேற்கண்ட நால்வருக்கும் மரண தண்டனையை வாழ் நாள் தண்டனையாக மாற்றுவதில் மறுப்பு இல்லை என்று கூறிவிட்டார். எனவே இனிமேல் 'உணர்வு'க்கு இராணியைத் தாண்டி இராணி விசுவாசம் இருக்காது என்று நாம் நம்பலாம். நான்கு பேருக்கும் மரண தண்டனையை இரத்துச் செய்யும் கருத்தை ஆதரித்து இனிவரும் இதழ்களில் 'உணர்வு' எழுதும் என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

ஆனால் தண்டனைப்பற்றி இஸ்லாம் கூறுவதாக 'உணர்வு' கூறும் கோட்பாடுதான் சிக்கலானது. கொலையுண்டவரின் குடும்பத்தினர் தான் தண்டனையைத் தீர்மானிக்க வேண்டும் எனில் நீதிமன்றங்கள் தேவையில்லை. சவுதி அரேபியாவில் கூட தண்டனையை நிர்ணயித்து நிறைவேற்றும் பொறுப்பை நீதிமன்றங்கள்தான் வைத்திருப்பதாக அறிகிறோம். தண்டனையை நிறைவேற்ற நீதி மன்றத்திற்கு உரிமை இருக்கும் போது, அதை குறைக்கவும் நீதி மன்றத்திற்கு உரிமையுண்டு. குடியரசுத் தலைவர் என்ற அரசதிகார தலைமைப்பீடம் ஒரு குறிப்பிட்ட அளவு நீதிமன்றத்தின் பணியையும் செய்ய கடமைப்பட்டிருக்கிறது. அந்த வகையில்தான் மரண தண்டனை அளிக்கப்பட்டவர்களுக்கு கருணை காட்டி வாழ்நாள் தண்டனையாக மாற்றும் அதிகாரம் அதனிடம் அரசமைப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

கொலையுண்டவர் குடும்பத்தினர் தான் தீர்ப்பு வழங்க வேண்டுமெனில் அவர்கள் பழிவாங்கும் நோக்கில் முடிவெடுக்கலாம். அப்பாவிகளுக்குக் கூட தண்டனை வழங்க விரும்பலாம். சில நேரங்களில் தண்டனையே கொடுக்க வேண்டாம் என்று கொலையுண்டவர் குடும்பத்தினர் கோரலாம். அது விருப்பு வெறுப்பு அடிப்படையில் முடிவாகும் நிலையாக இருக்கும். நீதி மன்றங்கள் அப்பாவிகளை தண்டிப்பதில்லையா, குற்றவாளிகளை தப்பவிடுவதில்லையா என்பதில், இதற்கும் அதற்கும் வேறுபாடு இருக்கிறது.

கொலையாளிகளுக்கு அதிபட்ச வாழ்நாள் தண்டனைதான் என்று தெரியும் போது, அற்பகாரணத்துக்காகக் கூட கொலை செய்ய துணிந்து விடுவார்கள் என்று இவ்விதழ் கூறுகிறது. இந்தியாவில் மரண தண்டனை இருக்கும் நிலையில் கொலைகள் முன்பை விட பெருகி இருக்கிறதே! அதற்கு என்ன விடை கூறுகிறது இவ்விதழ்.

கொலைக் குற்றங்கள் பெருகுவதற்கு அல்லது குறைவதற்கு தண்டனையின் அளவு மட்டும் காரணமல்ல. சமூக, அரசியல், நீதித்துறை காரணங்கள் பல இருக்கின்றன. சீனா, சிங்கப்பூர், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் சட்டங்கள் கடுமையாக இருப்பதால் குற்றங்கள் குறைவாகவுள்ளதாக இவ்விதழ் கூறுகிறது.

சீனாவின் சமதர்ம சமூக அமைப்பு குற்றம் குறைவதற்கு

பான்பராக் கடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

ஒரு வாய்ப்பை தருகிறது. சிங்கப்பூர் மிச் சிறிய நாடு. கண்காணிப்பும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளும் உடனுக்குடன் எடுக்க முடியும். சவுதி அரேபியாவில் மன்னர் ஆட்சி என்ற சர்வாதிகார ஆட்சி முறை நிலவுகிறது. அங்கு கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்ற கொடூரமான தண்டனை முறை இருக்கிறது. இருந்தும் அங்கு குற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அத்துடன் சவுதியில் குற்றம் செய்தோரை தண்டிப்பதில் இரண்டு வகை அணுகு முறைகள் இருக்கின்றன. வெளி நாடுகளில் இருந்து வேலைக்கு வந்தவர்கள் குற்றம் செய்தால் கடுமையான அணுகு முறையும் சவுதி குடிமக்கள் குற்றம் செய்தால் ஒப்பீட்டு அளவில் சற்று மென்மையான அணுகு முறையும் உள்ளது.

எப்படியிருப்பினும் இந்த நாடுகள் உள்ளிட்டு உலகில் எந்த நாட்டிலும் மரண தண்டனை கூடாது என்பதே நமது கோரிக்கை.

பெட்ரோலியத்தால் பெரும் பணக்காரர்களாக வாழும் சவுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பண்பாட்டுச் சீரழிவு இந்தியாவில் உள்ள பண்பாட்டுச் சீரழிவுக்கு எந்த வகையிலும் குறைவானது அல்ல என்பதை சவுதிபோய் வந்தவர்கள் அறிவார்கள். ஆனால் அவைகள் வெளியே வரக்கூடிய அளவிற்கு ஜனநாயகம் இல்லை. பத்திரிக்கை சுதந்திரமும் இல்லை. எனவே அங்கு என்ன நடக்கிறது என்பதை முழுவதுமாக அறிந்து கொள்ள வாய்ப்பில்லாத நாட்டை ஒரு சராசரி அளவு கோலாக எடுத்துக் கொண்டு நாம் ஆய்வு செய்ய முடியாது.

உலகில் மரண தண்டனை ஒழிக்கப்பட்ட 68 நாடுகளில் மரண தண்டனை இல்லை என்பதற்காகவே கொலைக் குற்றங்கள் பெருகி விட வில்லை என்று ஆய்வு புள்ளி விவரங்கள் கூறுவதாக திரு. வி.ஆர். கிருஷ்ணய்யர் தெரிவிக்கிறார். இவ்வாறு நாம் கூறும் போது இதில் ஒரு நாட்டையும் இன்னொரு நாட்டையும் ஒப்பிட்டுப் பேசுவது கூட பொருத்தமாக இராது என்று கூறுகிறது 'உணர்வு' தன் வாதத்திற்கு ஆதரவாக சீனா, சிங்கப்பூர், சவுதி அரேபியா ஆகிய நாடுகளை ஒப்பிட்டுக் காட்டும் போது இந்த 'உணர்வு' ஏன் வரவில்லை?

ஒரு கோட்பாடு குறித்து வாதம் செய்யும் போது அதில் கருத்துக்கள் மோத வேண்டும் மேத தவிர, தனி மனித உணர்வுகளை தாக்குவதாக அந்த வாதம் அமையக் கூடாது. இந்த குறைந்த பட்ச ஜனநாயகத்தைக் கூட 'உணர்வு' ஏடு கடை பிடிக்க பக்குவப்படவில்லை. குடியரசுத் தலைவரின் உறவினர் கொல்லப்பட்டிருந்தால் என்றும் சின்னகுத் தூசியாரின் தங்கைக்கு அல்லது டாக்டர் இராம தாசின் மகளுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டிருந்தால் என்று கொச்சையான வாதத்தில் இறங்கி ஒரு கோட்பாட்டுக் கான வாதத்தை தாழ்த்தியிருக்க வேண்டியதில்லை.

தடா சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று கோரியதில் உணர்வு இதழ் ஆசிரியருக்கும் ஆசிரியர் குழுவிற்கும் பங்கு இருந்து இருக்கும் என்று நாம் நம்புகிறோம். வெடிகுண்டு, கொலை என்ற பயங்கரவாத செயல்களுக்கு தடா சட்டம்தான் பொருந்தும் என்ற அப்போதைய இந்திய அரசின் வாதத்தை நீங்கள் அன்றைக்கு ஏற்றுக் கொண்டீர்களா? நம்மைப் பொறுத்தவரை தடா சட்டம் மனித உரிமைக்கு எதிரானது என்ற முறையில் நாம் எதிர்த்தோம். தடா சட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கணிசமானோர் இஸ்லாமிய மக்கள். இவர்களுள் பலர் அப்பாவிகள். இஸ்லாமியர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்பதற்காக மட்டும்தான் தடாவை திரும்பப் பெறவேண்டும் என்று உங்களைப் போன்றவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டதா என்பதையும் அறியவிரும்புகிறோம்.

கோவை வெடி குண்டு வழக்கில் ஒரு வேளை யாருக்கேனும் மரண தண்டனை விதிக்கப்பட்டால் நாங்கள் அப்போதும் அதை எதிர்ப்போம். நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை இப்போதே உணர்வு இதழில் தெளிவாக்குவது நல்லது.

ஆட்டோ சங்கருக்கும் ஜெயப்பிரகாசுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறை வேற்றியபோது இவர்கள் எல்லாம் எங்கே சென்றிருந்தார்கள் என்று கேட்கிறீர்கள். ஜெயப்பிரகாசுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு, தண்டனைக்காலம் முடிந்து சென்னையில் தொழில் செய்து வருகிறார்.

மரண தண்டனைக் கூடாது என்று கூறிய மனித உரிமை அமைப்புக்கள் ஆட்டோ சங்கருக்கும் மரண தண்டனை கூடாது என்ற கருத்தைத்தான் கொண்டிருந்தன. ஆட்டோ சங்கர் ஒரு சமூக விரோதி என்ற காரணத்தால் அவருக்கான மரண தண்டனை ஒழிப்புக் கோரிக்கை மக்கள் இயக்கமாக வளரவில்லை. இராஜீவ் காந்தி கொலை ஓர் அரசியல் கொலையாக இருக்கின்ற காரணத்தாலும், இந்திய வரலாற்றில் இது வரையில்லாத கொடுமையாக ஒரு நீதி மன்றம் ஒரே நேரத்தில் 26 பேருக்கு மரண தண்டனை வழங்கிய அநீதி நடந்ததாலும் மரண தண்டனை ஒழிப்பு என்ற கோரிக்கை புதிய பரிணாமம் பெற்றது, மக்கள் இயக்கமாக வளர்ந்துள்ளது.

இதுவரை மரண தண்டனை ஒழிப்புப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தவர்கள் கூட 26 பேர்களுக்கு மரண தண்டனை என்ற தீர்ப்பு வந்த பிறகு ஆழ்ந்து சிந்திக்க தொடங்கினார்கள். ஒட்டு மொத்தமாக மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற முடிவுக்குகு வந்தார்கள். ஒரு குறிப்பிட்ட சம்பவம் வரலாற்று திருப்பங்களை ஏற்படுத்துவதில்லையா? கலிங்கப் போரின் மரண ஓலங்கள் அசோகனை அகிம்சாவாதியாக மாற்றியது. நபிகள் நாயகம் கூட பிறக்கும் போதே மார்க்கக் கருத்துக்களை உருவாக்கி விடவில்லையே வாழ்க்கையின் அனுபவத்தில் இருந்து தானே புதிய மார்க்கத்தை உருவாக்கினார்கள்.

'உணர்வு' இதழ் தனது மத்திய காலச் சிந்தனையில் இருந்து விடுபட்டு மனித உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கக் கூடிய இந்தக் காலத்திற்கு ஏற்ப சிந்திக்கட்டும்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**




படிப்பகம்

www.padippakam.com

# கொலைக் களமான சிறைச்சாலை

- பாரதி

அண்மைக் கால தமிழகச் சிறை வரலாற்றில் காணாத பெருங்கொடுமையாக இந்த நவம்பர் 17 -ஆம் நாள் சென்னை நடுவண் சிறையில் பச்சைப் படுகொலை அரங்கேறி உள்ளது.





துப்பாக்கிச் சூட்டிலும், தடியடியிலும் 13 கைதிகள் மரணமடைந்துள்ளனர். சிறை துணை அதிகாரி ஜெயக்குமார் எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். 'சிறைக்குள் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் எல்லாம் சமூக விரோதிகள், கொல்லப்பட வேண்டியவர்கள். டெபுடி ஜெயிலர் ஜெயக்குமார் நேர்மையானவர் அவர் கொல்லப்பட்டது ரவுடித்தனம்' என்று பத்திரிகைகள் எல்லாம் தீர்ப்பு எழுதி முடித்து விட்டன. இது பற்றி நீதி விசாரணை தேவையில்லை என தமிழக அரசும் முடிவிட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மக்கள் குடியியல் உரிமைக் கழகம் (பி.யூ.சி.எல்) அறிக்கை தந்துள்ளது. அது பற்றியெல்லாம் கண்டு கொள்ள பத்திரிகைகளும் அரசும் தயாராக இல்லை.

கடந்த ஜூலை மாதத்தில் கவுஸ் என்ற கைதி இறந்து போனார். அதிகாரிகள் அடித்து கவுசை கொலை செய்து விட்டார்கள் என்று சிறைப்பட்டோர் மத்தியில் வலுவாக ஐயம் உள்ளது. கவுஸ் தற்கொலை செய்து கொண்டு விட்டார் என்று கதையை முடித்து விட்டது சிறை நிர்வாகம்.

பாக்சர் வடிவேலு இறந்ததையொட்டியே நவம்பர் 17 கலவரம் தொடங்கியது.

பாக்சர் வடிவேலு என்பவர் வட சென்னை ரவுடி என்பது அனைவரும் அறிந்த உண்மை. அதற்காகத்தான் அவர் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். அவர் மீது வழக்குகள் நடந்து வருகின்றன. மெய்ப்பிக்கப்பட்டால் அதற்குரிய தண்டனையை அவர் பெறப்போகிறார்.

அவர் ரவுடி என்பதால்தான் சிறையில் உள்ளார். வழக்குகள் உள்ளன. அதற்கு மேல் அவரைக் கொல்வதற்கு சிறை அதிகாரிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது.

ஆனால் நடந்தது படுகொலை பாக்சர் வடிவேலுவைத் தனிமைச் சிறையில் அடைத்து தொடர்ந்து பலநாட்கள் அடித்துத் துன்புறுத்தி கொலை செய்த சிறை அதிகாரிகள் அவர் வயிற்றுப் போக்கால் இறந்து போனதாக கதை கட்டினார்கள்.

இறந்து போகும் அளவுக்கு வயிற்றுப் போக்கு என்றால் ஒரே நாளில் நடந்து விடுவதில்லை. அவ்வளவு கடும் வயிற்றுப் போக்கு இருந்தது உண்மையானால் வெளி மருத்துவமனையில் அனுமதித்திருக்க வேண்டும். அப்படியும் நடக்கவில்லை. உள்ளேயே வைத்து கிசிச்சை அளித்ததாகக் கூறுகிறார்கள். சிகிச்சை பலனின்றி நவம்பர் 17 அதிகாலை பாக்சர் வடிவேலு இறந்து விட்டதாக்க் கூறினார்கள்.

இதை நம்பாத கைதிகள் நவம்பர் 17 காலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதிகாரிகளின் ஆணவப் போக்கு இவர்களின் ஆத்திரத்தைத் தூண்டியதால் போராட்டம் கலவரமாக மாறியுள்ளது.

அதன் பிறகு சிறை துணை அதிகாரி ஜெயக்குமார் தலைமையில் சிறைக் காவலர்கள் கைதிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதலில் இறங்கி உள்ளனர்.

இதனால் ஆத்திரமுற்ற கைதிகள், குறிப்பாக பாக்சர்

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

வடிவேலு குழுவைச் சேர்ந்தவர்கள் பதில் தாக்குதலில் இறங்கி உள்ளனர். அத்தாக்குதலின் போது ஆவண அறையில் புகுந்து கொண்ட அதிகாரி ஜெயக்குமார் எரித்துக் கொல்லப்பட்டார்.

இதன் பிறகு அதிர்ச்சியில் பின் வாங்கிய கைதிகளை, ஆத்திரம் கொண்டு சிறைக் காவலர்கள் தாக்கி, கிட்டத்தட்ட கலவரத்தை ஒடுக்கி விட்ட சூழ்நிலையில்தான் காவல்துறை சிறைக்குள்ளே புகுந்துள்ளது.

எந்த விதத் தேவையும் இல்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகிறது. பயந்து கொட்டடிக்குள் பதுங்கிக் கொண்டவர்களையும் வெளியே இழுத்துப்போட்டு அடித்து நொறுக்கி உள்ளனர். சென்னை சிறையே ரத்தக்காடாக மாறியது. நூற்றுக்கணக்கானோர் முடமாக்கப்பட்டனர். 13 பேர் கொல்லப்பட்டனர்.

ஒரு கால் விளங்காத கைதி ஜெயபால், கால் ஊனமுற்ற சின்னப்பையன் போன்றவர்களும் பலியானவர்களில் அடங்குவர்.

இறந்து போனவர்களில் பலர் ரவுடிகளாக இருக்கலாம். அதற்காக நடந்த படுகொலையை நியாயப்படுத்தி விட முடியாது.

கலவரம் குறித்து அமைச்சர் ஆலடி அருணா சட்டமன்றத்தில் அளித்த அறிக்கை மோசடியானது. கைதிகள் சிறையிலிருந்து தப்பிப்பதற்காக நடத்திய முயற்சியின் விளைவே இது என்று அவர் கூறுவதில் எள்ளளவும் உண்மை இல்லை.

தப்பிக்க நினைப்பவர்கள் சிறைக் கூரைகளின் மீது நின்று "படுகொலை நடக்கிறது. பத்திரிகைகளே வாருங்கள்" என்று பதாகை எழுதிக் காட்டுவார்களா?

சரி. தப்பிச் செல்வதைத் தடுப்பதுதான் வேலை என்றால், சுவர் பாதுகாப்பைப் பலப்படுத்தினாலே போதுமானது. இது உண்மை இல்லை என்பதையே நடந்த படுகொலை நமக்குக் காட்டுகிறது.

நடந்தவற்றின் உண்மை அறிய உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட விசாரணை ஆணையம் அமைத்து விசாரிக்க வேண்டும்.

இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈட்டை மூன்று இலட்சமாக உயர்த்த வேண்டும்.

சிறைத்துறை சீர்திருத்தம் பற்றி இஸ்மாயில் குழு அளித்த பரிந்துரைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

சிறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் மனித உரிமை பற்றிய பயிற்சி அளிக்க வேண்டும்.

சிறைத்துறையில் நடக்கும் ஊழல்களை உடன் களைய வேண்டும். ■

## அறிஞர் கு.ச. ஆனந்தன் மறைவு



தமிழ்த் தேசியக் கருத்தாக்கத்திற்கு, தமது அரிய நூல்களால் வளம் சேர்த்த அறிஞர் வழக்கறிஞர் கு.ச. ஆனந்தன் 2.11.99 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகவும் வருந்தினோம்.

'மலர்க மாநில சுயாட்சி' 'இந்தியாவில் தேசிய இனங்களும் தமிழ்த் தேசியமும்' என்ற அவரது இரு நூல்களும் தமிழ்த் தேசியக் கருத்துக் கருவூலங்கள்.

அவர் சிறந்த திருக்குறள் ஆய்வாளர், தமிழ் வழிபாடு எவ்வாறெல்லாம் மாற்றப்பட்டு சமஸ்கிருத வழிபாட்டு ஆக்கிரமிப்பு நடந்தது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் கு.ச. ஆனந்தன் விளக்கக் கேட்பது அரிய வாய்ப்பு.

கு.ச.ஆ. மறைவு தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்குப் பேரிழப்பு.

அறிஞர் கு.ச. ஆனந்தன் அவர்களுக்கு அஞ்சலியும் அவர் இல்லத்தார்க்கு ஆறுதலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெ. மணியரசன்
பொதுச்செயலர்
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழம் பிறக்கும்

## தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் நாள் உரை

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் 27.11.99 அன்று தமிழீழத்தில் ஆற்றிய மாவீரர் நாள் உரை முழுமையாகக் கீழே தரப்படுகிறது.**

தமிழீழத் தாயகத்துக்காக உயிர் நீத்த நமது வீரர்களை நமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து புதைத்தோம்.

உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணுக்குள் மறையவில்லை. அவ்வுயிர்கள் கருவாகி காலத்தால் உருவம் பெற்று தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது.



**தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம், வரலாற்றின் குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும்.** அந்த சுதந்திர தேசத்தின் ஆன்மாவாக, ஆளுமையாக எமது மாவீரர்கள் என்றும் எம்முடன் இணைந்து வாழ்வார்கள்.

எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவு கொள்கிறோம். எமக்கு முன்னால் கால விரிப்பில் ஒரு புது யுகம் எமக்காக காத்து நிற்கிறது. எமக்குப் பின்னால் கடந்த காலத்தில் இரத்தம் தோய்ந்த வீர வரலாறு நீண்டு செல்கிறது.

மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்று பெருமையுடன் எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது.

இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது.

இப்புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்கால கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களை பீடித்த துன்பதும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும் எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்துகுகாக எமது மாவீரர்கள் மடிந்தார்களோ அப்புனித லட்சியம் இப்புதுயுகத்தில் நிறைவுபெறும்.

### வெற்றியின் சிகரம்

ஒப்பற்ற இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகிறேன்.

இம்மகத்தான இராணுவ வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல. போரியல் கலையில் ஓர் ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விசுவரூப பரிமாணம் கண்டு எமது எதிரி மட்டுமல்ல எதிரிக்கு பக்கபலமாக நின்று பயிற்சியும் ஆயுதமும் பண பலமும் வழங்கி வந்த உலகநாடுகளும் மலைத்துப்போய் நிற்கின்றன.

ஓயாத அலைகள் மூன்றாக குமுறிய இப்பெரும் சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையை அடைந்தது.

முழுபலத்தையும் ஒன்று குவித்து பெரும்படையெடுப்புகளை நடத்தி சில வருடங்களாக ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொடுத்து சிங்கள இராணுவம்

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர்.

வன்னி மண்ணில் அகலக் காலூன்றிய எதிரி தொடர் வலயமாக நிறுவிய படைத்தளங்களும், கட்டளைப் பீடங்களும் இருப்புப் பெட்டகங்களாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும் மிகக் குறுகிய காலத்தில் மிகக் கூடிய வேகத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த அற்புதம் உலகத்தின் புருவத்தை உயர்த்தியது.

வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் பட்டினங்களிலிருந்து எதிரிஇராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் இப்பொழுது புலிக்கொடி மார்தட்டி பெருமையுடன் பறக்கிறது.

## மணலாறு மீட்பு

காட்டுத்தீயாகப் பரவிய இப்பெரும் சமரில் எமது தாயகத்தின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

காலம்காலமாக தமிழர் வாழ்ந்த இப்புனித மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து தமிழர்களைக் கொன்றழித்து அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து வன்னியில் மிகச் செழிப்பான நிலங்களைக் கொண்ட எமது தேசத்தின் இதயபூமி மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

இந்த மண் மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைக் காட்டுகிறது. போர் இயல் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ஓயாத அலைகள் மூன்று என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்துக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் களநிலை வேகத்தையும் உலகத்துக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. எமது படையணிகளின் களநிலை வேகமும் வீச்சும், பொதுவான கூட்டுச் செயற்பாடும், துரித கதியில் படை நகர்த்தும் ஆற்றலும், எதிர்த்துத் தாக்கும் உத்திகளும், அபாரமான துணிவும், தேர்ச்சியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச் செய்து வருகிறது.

இந்த வரலாற்றுச் சமரில் களமாடி வீர சாதனை படைத்த சகல போராளிகளுக்கும், படை நடத்திய தளபதிகளுக்கும், இச்சமரில் பங்கொண்டு போராடிய எல்லைக்காப்புப் படையினருக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இந்தப் பெரும் சமரின் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து, உணவளித்து, இரத்தமளித்து உதவிபுரிந்து பெரும் பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றி.

## பிறந்த மண்

நில மீட்புக்காகவே இந்தப் போர் நடந்துகொண்டிருக்கிறது. தமிழீழம் எமக்குச் சொந்தமான நிலம். வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான நிலம். எமது வாழ்விற்கும் வளத்துக்கும் ஆதாரமான நிலம். எமது தேசிய அடையாளத்துக்கு அடித்தளமான நிலம். இந்த நிலத்தை தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைத் தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிபீடம் ஏறிய காலத்தில் இருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டு வருகிறது.

தமிழர் நிலத்தை அபகரித்து சிங்களமயமாக்குவது ஒருபுறமும் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து அதன் வளங்களை அழித்து அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவது இன்னொரு புறமுமாக எமது நிலம் மீது கொடுமை நடந்து வருகிறது.

இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். ஆகவே எமது விடுதலைப் போரானது ஒரு மண் மீட்பு போராகும். எமக்குச் சொந்தமான நிலத்தை மீட்டு அந்த நிலத்தில் எமது ஆட்சியுரிமையை இறைமையை நிலைநாட்ட நடைபெறும் போர்.

இந்த போரின் நோக்கம் குறிக்கோள் என்ன என்பதை இப்பொழுது எமது மக்கள் நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து அந்த நிலத்தில் அமைதி வாழ்வை இழந்து அகதிகளாக அலையும் மக்களுக்கு சொந்த மண்ணின் மகிமை புரியும். அந்த மண்ணில் ஆக்கிரமித்து காலூன்றி நிற்கும் அன்னியரை விரட்டவேண்டிய அவசியம் புரியும். இந்தப் புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே இந்த மண் மீட்புப் போரில் எமது மக்கள் எமக்கு பக்க பலமாக நின்று பல்வேறு வழிகளில் பங்களித்து வருகிறார்கள்.

இன்று எமது தமிழீழ விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று விளங்குகிறது.

## அரசியல் தீர்வு

எமது அன்பார்ந்த மக்களே, ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும் சமாதான வழிகாண்பதற்கான அரசியல் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை.

அதே வேளை சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்கள பேரினவாதம் தயாராக இல்லை என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிவரும் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

இவ்விரு கட்சிகளும் சிங்கள பவுத்த பேரினவாத சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறிபிடித்த தமிழ் விரோத சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக தமிழினத்துக்கு எதிராக ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டியிட்டுச் செயல்பட்டவை.

இந்த இன ஒடுக்குதல் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தமிழினத்துக்கு கொடுமையிழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும்.

## சாபக்கேடு

சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக்காலம் தமிழினத்துக்கு ஒரு சாபக்கேடாக அமைந்தது. தொடர்ச்சியான போரும், வன்முறையும், சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இடப்பெயர்வுமாக இக்கால கட்டத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட துயரமும் மிகக் கொடுமையானது.

இருண்ட, இரத்தம் படிந்த சந்திரிகாவின் அடக்குமுறை ஆட்சிக்காலம் நீண்டது. இந்தக் கொடிய ஆட்சியானது தமிழினத்தின் ஆன்மாவில் என்று மறியாத வடுவை ஏற்படுத்தியது.

உள்நாட்டில் தமிழருக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு ஜனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா. தமிழர் தாயகத்தை முழுசாக ஏப்பம் விடும் ஒரு நாசகார போர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டு அதனை ஒரு சமாதானத்துக்கான போர் முயற்சியாக வர்ணித்தார். முழு உலகமும் அவரை நம்பியது.

அவரது சமாதானப் போருக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளில் தமிழின துரோகிகளே சந்திரிகாவுக்குப் பக்கதுணையாக நின்றனர்.

நாம் சந்திரிகாவை நம்பவில்லை. நமது தேசிய பிரச்சினையை நீதியான முறையில் தீர்த்துவைக்கும் நேர்மையும் கொள்கைப்பாடும் அவரிடம் இருந்ததில்லை.

சிங்கள பவுத்த பேரினவாதத்தின் நவயுகப் பிரதிநிதியாகவே நாம் அவரைக் கண்டோம். எனவே தான் நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை. ஆயினும் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேசப் புறநிலைகள் உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினோம்.

போர் நெருக்கடி நீங்கிய நிலையில், இராணுவ ஆக்கிரமிப்பும் பொருளாதார நெருக்குதல்களும் அகன்ற ஓர் இயல்பான நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுகள் நடைபெற வேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

சமாதான பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்ற எமது யோசனையை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது. போருக்கு ஒய்வு கொடுக்கவோ, நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ, பொருளாதாரத் தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை. போரையும் பொருளாதாரத் தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாகப் பாவிக்கவே அரசு விரும்பியது.

சமாதானத்துக்கான போர் என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஓர் இர்ாணுவத் தீர்வையே குறித்து நிற்கிறது. போர் மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து புலிகள் இயக்கத்தை தோற்கடித்து தமிழினத்தை அடிமைகொள்வதே இத்திட்டமாகும். கடந்த ஐந்தாண்டு காலமாகவே இப்போர்த்திட்டத்தை செயற்படுத்த அவர் ஒயாது உழைத்தார். எத்தனையோ வேதனைகளைச் சந்தித்தபோதும் அவர் தனது இராணுவத் திட்டத்தை கைவிடவில்லை. இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ சமாதான பேச்சுகள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

போரைத் தொடர்ந்து நடத்தியவாறு சில வரையறைகளுடன் இரகசியமாக பேச்சுகளை நடத்தலாமென மூன்றாம் தரப்பு மூலமாக சந்திரிகா எமக்குத் தூது அனுப்பினார். நாம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு புறம் போரை நடத்திக் கொண்டு மறுபுறம் சமாதான பேச்சு நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. அத்தோடு அபத்தமானதும் கூட. தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும் அழிவையும் அவலத்தையும் சந்தித்து நிற்க நாம் எதிரியோடு கைகோத்து சமரசம் பேசுவது முடியாத காரியம். அத்துடன் எந்தவொரு நிபந்தனையோடும் காலவரையோடும் பேச்சுக்களை நாம் நடத்தத் தயாராக இல்லை.

சந்திரிகா எம்முடன் சமாதானத்துக்காக அன்புக் கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார். நாம் அந்த சமாதான பொறிக்குள் சறுக்கிவிழத் தயாராக இல்லை.

கடலோரம் கட்டிய மண் வீட்டுக்கு ஏற்பட்ட கதிபோல் சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் அடித்துச் சென்றுள்ளது.

இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்குச் சார்பாக திரும்பியிருக்கிறது.

புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி இராணுவப் போராதிக்க நிலையை பெற்றுவிட வேண்டும் என்ற சந்திரிகாவின ஐந்தாண்டுக்கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

ஆட்பலம், ஆயுதபலம், இராணுவ பலம், மக்கள் பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற நின்றபோதும் எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போதிய சக்தி எம்மிடம் இருந்தபோதிலும் நாம் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை.

உயிரழிவையும் இரத்தக்களரியையும் தவிர்த்து சமாதான வழியில் நாகரீகமான முறையில் தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே விரும்புகிறோம்.

**சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ண புறநிலையில் மூன்றாம் தரப்பு சாவதேச மத்தியத்துவத்துடன் நடைபெற வேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம்.**

சமாதானப் புறநிலை எனும்பொழுது போர் ஓய்ந்து பொருளதாரத் தடைகள் அகன்று எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஒரு இயல்பு நிலையையே நாம் குறிக்கிறோம்.

போரையும் நில ஆக்கிரமிப்பையும் பொருளாதார நெருக்குதல்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாகப் பாவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில் சமத்துவமும் புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூழ்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகிறோம்.

## நல்லெண்ண சமிக்ஞை

நாம் பேச்சுக்கான கதவைத் திறந்தபடி சிங்கள தேசத்துக்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையை காட்டுகிறோம்.

ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலைகளைத் தோற்றுவிப்பதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் இணங்கப்போவதில்லை என்பது எமக்குத் தெரியும்.

நீண்டகாலமாக கடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப்பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும்.

எனவே சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசி இணக்கம் கண்டு எமது தேசிய சிக்கலுக்குத் தீர்வு காணலாம் என நாம் கற்பனையில் வாழவில்லை.

**மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும் அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருந்தது.**

**அதுதான் போராடிப் பிரிந்து சென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி.**

இந்த வழியில்தான் சிங்கள தேசம் தமிழினத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

## தமிழீழமே தீர்வு

**சுதந்திரத் தமிழீழத் தனியரசே எமது தேசிய பிரச்சினைக்கு இறுதியான உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்துவிட்டார்கள்.** எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாகத் தோளில் சுமந்து இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்தி போராடி வருகிறது.

இன்று எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.

எமது போராட்ட இலக்கு ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது.

நாம் நம்பிக்கையுடன் நமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து செல்வோம்.

நாம் ஒன்றிணைந்த சக்தியாக, ஒன்றுபட்டு ஒருமித்தெழுந்து எமது இலட்சியப் பாதையில் இணைந்து செல்வோம்.

சாவை தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காகக் காத்து நிற்கிறது.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" !**

### திண்டிவனத்தில் த.க.இ.பே. 2 ஆம் நிகழ்ச்சி

திண்டிவனம் நவம் 20 : தமிழ்க் கலை இலக்கியப் பேரவையின், திண்டிவனம் கிளை சார்பில் 2 ஆம் நிகழ்வு பெண் விடுதலை என்னும் பொருளில் நடைபெற்றது.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்' என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்கு திண்டிவனம் அரசு கல்லூரி பேராசிரியர் கவிஞர் கோவிந்தசாமி தலைமை தாங்கினார். கவிஞர் கோபால், அரச ஒளி, முத்துநகை உள்ளிட்டு பலர் கவிதை பாடினர்.

பெண் விடுதலை என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்கு எழுத்தாளர் இராசேந்திர சோழன் தலைமை யேற்க, சென்னை பெண்கள் எழுச்சி இயக்கம் சார்ந்த பேராசிரியை சரசுவதி உளுந்தூர்ப்பேட்டை தமிழ் வளர்ச்சி இயக்கம் சார்ந்த அறிவுக் கண்ணு ஆகியோர் உரையாற்றினர்.

ஆசிரியர் தனுசு வரவேற்புரையோடு தொடங்கிய இந்நிகழ்ச்சியின் இறுதியில் அமைப்பின் செயலாளர் இராசகோபால் நன்றி கூறினார்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# ஏமாற்றமளிக்கும் தமிழ் வழிக் கல்வி ஆணை

\- சிந்து

தமிழ் வழிக் கல்வி குறித்து 19.11.99 அன்று தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆணை ஏமாற்றமளிப்பதாக இருக்கிறது.

தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் ஏப்ரல் 25,26 -ல் நூற்றிரெண்டு தமிழ் உணர்வாளர்களின் சாகும்வரை பட்டினிப்போர் நடைபெற்ற போது, வரும் கல்வியாண்டிலிருந்தே 1 முதல் 5 வகுப்பு வரையில் தமிழே பயிற்று மொழியாக இருக்க ஆணை பிறப்பிக்கப்படும் என்று அரசு உறுதியளித்தது. அந்த உறுதி மொழி மீறப்பட்டு, வரும் கல்வி ஆண்டில் 1- ஆம் வகுப்பு தொடங்கி படிப்படியாக மூன்றாண்டுகளில் 5-ம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய் மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று இந்த ஆணை கூறுகிறது.

ஐந்தாம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாக்க மூன்றாண்டு அவகாசம் எதற்கு? தேவையில்லை. உறுதியளித்தப்படி வரும் ஆண்டிலிருந்து ஒரே தவணையில் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்று மொழி என்று உறுதியாகச் சொல்லியிருக்க வேண்டும்.

வணிக நிறுவனங்கள் தமிழில் பெயர்ப்பலகை வைக்க வேண்டும் என்ற ஆணை ஆறுமாதம்... ஒரு ஆண்டு... என்று நிறைவேறாமல் நீண்டு கொண்டே போகிறதே. இதே கதி இந்த ஆணைக்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

இப்போது +2 வரை தமிழில் படிப்பவர்கள் கல்லூரிகளில் ஆங்கிலத்தில் படிக்கும்போது சிரமப்படுவதைக் கண்டு கொள்ளாத அரசு, 5-ஆம் வகுப்பு வரை தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கு தவணை தருவது வேதனை தருகிறது. இது தேவையற்றது.

ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மூன்றாம் வகுப்பிலிருந்து அறிமுகப் படுத்தினால் போதும் என்று மோகன்குழு பரிந்துரைத்தது. அது பற்றி இந்த ஆணை மவுனம் சாதிக்கிறது.

இந்த ஆணையிலிருந்து சி.பி.எஸ்.இ. பள்ளிகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கணிசமான மாநில கல்வி வாரிய பதின்மப் பள்ளிகள் (மெட்ரிகுலேசன்) சி.பி.எஸ்.இ.க்கு மாறிக் கொண்டு, ஆங்கில ஆதிக்கத்தைத் தொடர்வதற்கு இது வழி செய்கிறது.

இந்த 'ஓட்டை - உடைசல்' உத்தரவு கூட சட்டம் (ACT) என்ற வடிவம் பெறவில்லை. வெறும் அரசாணையாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் நிறைவேறாமல் போவதற்கு வழியேற்படும்.

எழுதிக் கொடுத்த உறுதி மொழியை மீறி பதுங்கிப் பதுங்கி வந்து, தமிழ் வழிக் கல்வியை அரைகுறையாக்கும் அரசின் உறுதியற்ற தன்மை ஆங்கில ஆதிக்கவாதிகளுக்கே இடம் கொடுக்கிறது.

இதனால்தான், டிசம்பர் 8 - ஆம் நாள் பதின்மப் பள்ளி முதலாளிகள் பள்ளிகளை மூடினர். உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளனர். ஓடுபவனைக் கண்டால் விரட்டுபவனுக்கு எளிதாகிறது.

எனவே, தமிழக அரசு வரும் கல்வியாண்டிலிருந்தே 1 முதல் 5 - ஆம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழி என உறுதியாக ஆணையிட வேண்டும். இந்த ஆணையை வரையறுத்த சட்ட வடிவில் வெளியிட வேண்டும்.

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம் முதலான தொழில் படிப்புகளில் தமிழ் வழி வகுப்புகளை வரும் ஆண்டே தொடங்க வேண்டும்.

தமிழ் உணர்வாளர்கள் ஒருமித்து நின்று, வெற்றிகிட்டும் வரை போராட வேண்டும்.

## ஊராட்சி மன்ற நிர்வாகக் சீர்கேட்டை கண்டித்து ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், நெ.4, பொறையூர் கிராம ஊராட்சி மன்ற நிர்வாகச் சீர்கேட்டை கண்டித்து சித்தாமூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் தமிழக இளைஞர் முன்னணி மற்றும் கிராம பொதுமக்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொலைக்காட்சிப் பெட்டியை அதற்கான அறையில் வைக்கக் கோரியும், கிராம சபையைத் தொடர்ந்து கூட்டாததைக் கண்டித்தும், சுடுகாட்டுப் பாதையை சீர் செய்யக் கோரியும், பொறையூர் உடைந்த ஏரி மதகை சீர்செய்யக் கோரியும், குடியிருப்பு சாலைகளை சீரமைக்க கோரியும், ஊராட்சி மன்றத் தலைவரின் சுயநலப் போக்கைக் கண்டித்தும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை செயலாளர் தோழர் மு. செல்வம் தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்ட கோரிக்கைகளை விளக்கி த.இ.மு. தமிழகத் தலைவர் ச. யோகநாதன் அ. கோவிந்தசாமி (வட்டத் தலைவர்), அ. பரமசிவம் (வட்டக்குழு உறுப்பினர்), பா.க. வினாயக மூர்த்தி (தமிழக மாணவர் முன்னணி), இராம. சிவராமன், (சோத்துப்பாக்கம் கிளை செயலாளர்), மு. பாஸ்கரன், து. சுந்தரராசன் ஆகியோர் உரையாற்றினார்கள். தோழர். இர. இராசேந்திர சோழன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர் தமிழ்த் தேசப்பொதுவுடைமைக் கட்சி) ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து பேசினார். சி. அற்புதராஜ் நன்றி கூறினார்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# இனத்தின் வைகறை

– ஆ. இரும்பொறை

தன் உயிர் தெறித்து
இனம் வளர்க்கக் காத்திருக்கும்
கூந்தப்பனை

எந்தப் புயலுக்கும் நிமிர்ந்து
இடை முறியாது நிற்கும்
யாழ்ப் பனை.

பகை வீழ்த்த
வலி சேர்த்துப் பார்த்திருக்கும்
காட்டுப் புலி.

தொட்டவனைத் துரத்தித் தாக்கும்
கூட்டுக் கதண்டு

தடையிலா வான்வெளியில்
படைக்கும் கொக்குகள்
ஒழுங்கு நெறி?

பார்த்த பகையை
சீறிற்று பாம்பு

பார்த்து எடுத்ததை
பகிர்ந்தது கோழி

எதிரிக்கும் நடுவே
எக்காளமிட்டது காளை

தற்கொடைக்கு
பிறப்பெடுத்து அலைந்தது
வான் முகில்

அட...
எங்கெங்கோ
எதிலெதிலோ
நிறைந்து வெளிப்படுவீர் நீங்கள்
மாவீரப் புலிகளே!

மற்றவர்
உங்களின் கல்லறைக்கு வந்தனர்
நான்
இனத்தின் வைகறைக்கு வந்தேன்

உங்களால்த்தான்
மொட்டுகள் மலர்கின்றன
நான் எதைத் தூவுவேன்?

உங்களால் தான்
வித்தியவை விளைகின்றன
எதைப் படையல் செய்வேன்?

ஆம்
வெறுமனே நிற்கிறேன்!
உங்கள் முன்
சிறுவனாய் நிற்கிறேன்!!

பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை



படிப்பகம்

www.padippakam.com

# மரண தண்டனை ஒழிப்புப் பேரணி

## சென்னை குலுங்கியது

30.11.99 அன்று மரண தண்டனை ஒழிப்பு மனித நேயப் பேரணி சென்னை நகரை குலுக்கும் அளவிற்கு பிரம்மாண்டமாக நடைபெற்றது.

காலை முதலே அணி அணியாக அண்ணா சிலை அருகே பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தொண்டர்கள் கொடிகளுடனும் பதாகைகளுடனும் குவிந்தனர். காலை 11 மணியளவில் ஊர்வலம் தொடங்கியது. 26 தமிழர்கள் உயிர்காப்பு வழக்கு நிதிக்குழுவின் தலைவர் திரு.பழ. நெடுமாறன் தலைமையில் தமிழ்மணி, பாவலர் இராமச்சந்திரன், கோவி. தமிழ்வேந்தன், இறைக்குருவானார், கி.த. பச்சையப்பன், எஸ்வி. இராசதுரை, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, சந்திரேசன், இரா. இளங்கோவன், பாவாணன், இயக்குநர் வி. சேகர், கவிஞர் அறிவுமதி உட்பட பல அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

அரசியல் கட்சிகள், தமிழர் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த



பழ. நெடுமாறன் தலைமையில் பெ. மணியரசன், சாலினியார், வே. ஆனைமுத்து, ஆனூர் ஜெகதீசன், தியாகு,. பன்ருட்டி இராமச்சந்திரன், கு. இராமகிருஷ்ணன், எஸ்.வி. இராசதுரை, ச. மெல்கியோர், கார்முகில், சந்திரேசன், என். சந்திரசேகரன், இறைக்குருவானார் ஆகியோர் கொண்ட தூதுக் குழுவினர் கோட்டைக்குச் சென்று முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் கையெழுத்திட்ட கருணை மனுவை அளித்தனர்.

இம்மனு தொடர்பாக குழுவின் தலைவர் பழ. நெடுமாறன் கூறியவற்றை முதலமைச்சர் அனுதாபத்துடன் கேட்டார். தங்கள் வேண்டுகோளுக்கு அவர் செவி சாய்ப்பார் என்ற நம்பிக்கையுடன் தூதுக்குழுவினர் விடைபெற்றனர்.

நடைபெற்ற இப்பேரணியில் நா. அருணாசலம், பெ. மணியரசன், கார்முகில், பண்ருட்டி இராமச்சந்திரன், சாலினியார், அற்புதம் குயில்தாசன் அருட்சகோதரி ஹெர்மிளா, தியாகு, இரா.சனார்த்தனம், மெல்கியோர், கு. இராமகிருஷ்ணன், ஆனூர் ஜெக்தீசன், பி.ஆர். குப்புசாமி, இரா. அழகிரி, திருமறவன், அ.செ. சின்னப்பா, உண்மைவிரும்பி,. வெ. ஆனைமுத்து, ம.செ. பல்லாயிரக்கணக்கானவர்கள் பேரணியில் உணர்ச்சிப் பெருக்குடன் முழக்கமிட்டவாறு வந்தனர். ஏராளமானப் பெண்களும் குழந்தைகளுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்

முடிவில் நடைபெற்றக் கூட்டத்திற்கு நா. அருணாசலம் த்லைமை தாங்கினார். பல தலைவர்கள் பேசினார்கள்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

## பான்பராக் தடைகோரி சிதம்பரம் பகுதியில் தெருமுனைக் கூட்டங்கள்

பான்பராக் உள்ளிட்ட போதைப் பாக்குகளைத் தடை செய்யக் கோரி 7.12.99 அன்று சிதம்பரம் நகரில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

சிதம்பரம் பேருந்து நிலையம் எதிரில் காந்தியார் சிலை அருகிலும், தெற்கு சன்னதியிலும், மேலவீதியிலும் இக் கூட்டங்கள் நடைபெற்றன. த.தே.பொ.க. நகரச் செயலாளர் தோழர் கு. சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார். தமிழக மாணவர் முன்னணி பொதுச் செயலாளர் தோழர் ம. செந்தமிழன் விளக்கவுரையாற்றினார்.

8.12.99 அன்று மாலை புவனகிரி, அண்ணாசிலை அருகில் கூட்டம் நடைபெற்றது. தோழர் கு. சிவப்பிரகாசம் தலைமையில் தோழர்கள் கி. வெங்கட்ராமன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர், த.தே.பொ.க.), ம. செந்தமிழன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

## தூக்கு தண்டனை கூடாது தமிழக எழுத்தாளர்கள் கோரிக்கை



மரண தண்டனைக்கெதிரான தமிழக எழுத்தாளர்கள் மாநாடு 27.11.99 அன்று சென்னை, தேவநேயபாவாணர் நினைவு நூலக கட்டடத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.

மரண தண்டனை எதிர்ப்பு இயக்க பொறுப்பாளர் திரு. எஸ்.வி. ராஜதுரை தலைமை தாங்கினார். குடியியல் உரிமைக் கழகத்தின் தலைவர் திரு. ரவிக்குமார் அறிமுக உரை நிகழ்த்தினார். எழுத்தாளர்கள் ராஜம் கிருஷ்ணன், கி.ராஜநாராயணன், சிற்பிபாலசுப்ரமணியன், பொன்னீலன், மு.மேத்தா, சுந்தரராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, அ. மார்க்ஸ், கோவை ஞானி, நா.முத்துசாமி, இன்குலாப், செயப்பிரகாசம், இராம.சுந்தரம் ஆகியோர் நான்கு பேர் மரண தண்டனையை ரத்து செய்யக் கோரியும், இந்திய சட்டத்திலிருந்தே மரண தண்டனையை நீக்க வலியுறுத்தியும் உரை நிகழ்த்தினர்.

நால்வர் மரண தண்டனைக் கெதிராகவும், மரண தண்டனையே கூடாதென்றும் வலியுறுத்தி தமிழகத்தைச் சேர்ந்த 138 எழுத்தாளர்கள் குடியரசுத் தலைவருக்கு மனு அளித்துள்ளது நினைவு கூரத்தக்கது.

### பெரும்புலவர்
## வி.பொ. பழனிவேலனார் 90 ஆம் அகவை நிறைவுவிழா

தன்மானத் தமிழ் அறிஞரும் பன்னூல் ஆசிரியருமான பெரும் புலவர் திருத்துறைக்கிழார் வி.பொ. பழனிவேலனார் அவர்களின் 90 ஆம் அகவை நிறைவு விழா 1.12.99 அன்று தஞ்சையில் நடைபெற்றது.

முனைவர் இரா. இளவரசு தலைமையேற்க, முனைவர் மு. இளமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். புலவர் இறைக்குருவனார் தொடக்க உரை ஆற்ற புலவர் வி.பொ.ப.அவர்களின் 'திருக்குறள் தேர்பொருளுரை', 'தமிழ் இலக்கியச் சொல் அகர முதலி' ஆகிய நூல்களை முனைவர் சாலினி இளந்திரையன் வெளியிட்டார். தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.நா.மீ. உபயதுல்லா அவர்களும், தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிறுவனர் திரு. நா. அருணாசலம் அவர்களும் முதற் படிகளைப் பெற்றுக் கொண்டனர்.

தோழர் பெ. மணியரசன், திரு. குழ. செல்லையா, பேரா. ம.இலெ. தங்கப்பா, பேரா.பி. விருத்தாசலனார், திரு. அருளாளன், முனைவர் ப. வளனரசு, பேரா. கு. பூங்காவனம், செந்தலை ந. கௌதமன், புலவர் த. சுந்தரராசன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திருத்துறைக்கிழார் வி.பொ.ப. ஏற்புரை நிகழ்த்தினார். முனைவர் தமிழ்ப்பாவை நன்றியுரை நல்கினார்.

## திருமண வாழ்த்து

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி கருணாநிதி நகரைச் சார்ந்த திரு மாரியப்பன்- ரஞ்சிதம் இவர்களின் புதல்வன் த.தே.பொ.க. உறுப்பினர் தோழர் மா. **சேகருக்கும்**, காசவளநாடு புதூர் க. சீதா - நினைவில் நிற்கும் கணபதி இவர்களின் புதல்வி **க. மலர்கொடிக்கும்** இல் வாழ்க்கை ஒப்பந்த விழா 10.11.99 அன்று தஞ்சையில் தோழர் பெ. மணியரசன் தலைமையில் இனிதே நடைபெற்றது.

மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதிக்கு ரூ.250/- வழங்கப்பட்டது.

மணமக்களுக்கு வாழ்த்துகள்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# முதல்வன்

சுஜாதா எழுதிய ‘பதவிக்காக’ என்ற நாவல் சற்றுதிருத்தப்பட்டு ‘முதல்வன்’ என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்திருக்கிறது.

அரசியல் ஒரு சாக்கடை என்றும் அரசியல் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்றும் கருதக்கூடிய நிருபர் ஒருவர் தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்பில் முதல்வரிடம் பேட்டி காண்கிறார். பேட்டியில் முதல்வரின் ஆட்சியில் நடக்கக்கூடிய அவலங்களைப் பற்றி ஆதாரத்துடன் கேள்விகளைக் கேட்கிறார்.



முதல்வன்

முதல்வரோ கேள்வி கேட்பது எளிது. உன்னால் ஒரு நாள் முதல்வராக இருந்து சமாளிக்க இயலுமா? என்று நிருபருக்கு சவால் விடுகின்றார். நிருபரும் சவாலை ஏற்று ஒருநாள் முதல்வராக இருக்கிறார்.

ஒருநாள் முதல்வர் ரேசன் கடைக்குச் சென்று குறைவாகப் பொருட்களை வழங்கும் ஊழியரை இடை நீக்கம் செய்கின்றார். மருத்துவமனைக்குத் தாமதமாக வரும் மருத்துவரையும், இலஞ்சம் கேட்கும் காவல்துறை அதிகாரியையும் இடை நீக்கம் செய்கிறார். இவர்களை மட்டுமல்லாது 46000 அரசு ஊழியர்களையும் இடைநீக்கம் செய்து இறுதியாக மந்திரிகள் மற்றும் முதல்வரை கைது செய்ய உத்தரவிடுகின்றார்.

ஆட்சி கவிழ்கிறது. மக்கள் நிருபரை முதல்வராகத் தேர்ந்தெடுக்கின்றார்கள். முன்னாள் முதல்வர் இவரை ஒழிக்க சதிவேலைகளில் ஈடுபடுகிறார். அவர்களின் சதியை முறியடித்து முன்னாள் முதல்வரைப் பழிவாங்குகிறார். இதுதான் படத்தின் கதை.

நாற்காலி அரசியல் என்பது லாபம் தரும் தொழிலாக மாறி இருக்கிறது. பதவியை எதிர்பார்க்காமல் சமூகக் கொடுமைகளுக்கு எதிராக அணிதிரள்வது, போராடுவது, அதற்காக உயிரிழப்பது போன்ற அர்ப்பணிப்பு அரசியல் இங்கு ஏளனமாகப் பார்க்கப்படுகிறது.

நாற்காலி அரசியல் தலைவர்கள் பதவிக்காக கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப்பதும், இலட்சியவாதிகளைப் புறக்கணிப்பதும் அரசியல் மீது மக்களுக்கு எரிச்சலை உண்டுபண்ணுகிறது.

வரலாற்றின் நாயகர்கள் மக்கள் என்றார் மாவோ ஆனால் நம்முடைய தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகன் மட்டுமே காதலிப்பதும் சண்டைபோடுவதும் சமூக கொடுமைகளை எதிர்ப்பதும், போராடுவதும் . என்பதாக மாறியுள்ளது. எல்லாக் கொடுமைகளையும் தீர்க்க யாரோ ஒரு கதாநாயகன் வருவான். அவனால்தான் எல்லாம் முடியும் நம்மால் எதுவும் முடியாது என்கிற வேதாந்த மனப்பான்மையை தமிழ்த் திரைப்படங்கள் தொடர்ந்து பரப்பி வருகின்றன. இப்படிப்பட்டக் கருத்துள்ள படம்தான் முதல்வன்.

அரசின் செய்திப் படம் போல் ஒருநாள் முதல்வரின் நடவடிக்கை இருக்கிறது. ஒரே நாளில் பல ஆயிரக்கணக்கான ஊழியர்களை இடைநீக்கம் செய்யும் முதல்வன். அரசு எப்படி செயல்படும் என யோசிக்கவில்லை. நடைமுறையில் சாத்தியம்தானா?

ஜென்டில்மேன் படம் போல், இட ஒதுக்கீட்டுக்கு எதிராக குட்டையை குழப்பாமல் கல்விக் கூடச் சான்றிதழ்களில், சாதி பெயருக்குப் பதில் SC, ST, MBC, BC, OC என்று குறியீட்டை கொடுக்கிறார். ஆனால் நடைமுறை சாதிய சிக்கல்கள் பற்றி ஒன்றும் ‘அலட்டிக் கொள்ளவில்லை.’

படத்தின் அடுத்த காட்சி என்ன என்று மூளையை கசக்க வேண்டிய அவசியம் கிடையாது. கதையின் ஓட்டம் முன் கூட்டியே தெரிந்து விடுவதால் ஏற்படக்கூடிய தொய்வை, சாமார்த்தியமான திரைக்கதை, கேவி ஆனந்தின் ஒளிப்பதிவு, இரகுமானின் இசை, மற்றும் கிராபிக்ஸ் இவைகளால் ஈடு செய்து விறுவிறுப்பை உண்டாக்குகிறார்கள்.

குடும்ப மசாலா படம், காதல் மசாலாபடம், போல் இது ஓர் அரசியல் மசாலா படம். அவ்வளவே!

– ‘நாசே’

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சையைகக் குலுக்கிய தமிழகப் பெருவிழா

1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ம் நாள் தமிழ்நாடு உருவாகிய நாளை தமிழ்ச்சான்றோர் பேரவை, தமிழகப் பெருவிழாவாக கடந்த நான்கு ஆண்டுகளாக கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு 5ஆம் ஆண்டு தமிழகப் பெருவிழா தஞ்சையில் நவம்பர் 1,2 நாட்களில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

நவம்பர் முதல் நாள் மாலை தஞ்சை கரந்தை கல்லூரி வளாகத்திலிருந்து தமிழவேள் உமா மகேஸ்வரனார் சிலைக்கு மாலை அணிவித்தபிறகு தமிழர் எழுச்சிப் பேரணி புறப்பட்டது. பேரணிக்கு பேராசிரியர் விருத்தாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். தஞ்சை வீரச் சோழன் கலைக்குழுவினரும், நெல்லை சிவ்கிரி கலைக்குழுவினரும் போர்ப் பறை முழங்க, தமிழ் உரிமை, தமிழர் உரிமை முழக்கங்களுடன் புறப்பட்ட பேரணி தஞ்சை நகரத்தின் பல்வேறு வீதிகள் வழியாக, நாஞ்சிக் கோட்டை சாலையில் உள்ள காவேரி திருமண மண்டபத்தை அடைந்தது.

திரு.நா. அருணாசலம் (நிறுவனர் தமிழ்ச் சான்றோர் பேரவை) தமிழ் சான்றோர் பேரவையின் புதிதாக வடிவமைக்கப்பட்ட கொடியை ஏற்றி வைத்தார்.

பேராசிரியர் இலக்குவனார் பெயரில் அமைக்கப்பட்ட அரங்கத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கின. கச்சத்தீவு சிக்கலை விளக்கும் அழகான ஓவியம் மேடையை அலங்கரித்தது. கலைவாணன் குழுவினர் இதனை வடிவமைத்திருந்தனர். நிகழ்ச்சிகளுக்கு தமிழறிஞர் தமிழண்ணல் தலைமை தாங்கினார். வரவேற்புக்குழுத் தலைவர் தோழர் பெ. மணியரசன் தொடக்கவுரை நிகழ்த்தினார். தஞ்சை அ. இராமமூர்த்தி, சி. மகேந்திரன் ஞானசம்பந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இறுதியாக மதிமுக பொதுச் செயாளர் திரு வைகோ சிறப்புரையாற்றினார். புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் தமிழிசை நிகழ்ச்சியோடு முதல் நாள் நிகழ்ச்சி நள்ளிரவு வரை நீண்டது.

இரண்டாம் நாள் காலை தமிழிசைப் பாணர் தேனிசை செல்லப்பாவின் எழுச்சி இசையுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. 1999 ஏப்ரல் 25 சென்னையில் நடைபெற்ற தமிழ் வழி கல்விக்கான பட்டினிப் போரில் பங்கேற்ற 102 மொழிப்போர் வீரர்களுக்கு தமிழக எல்லைப்போர் தியாகி கன்னியாகுமரி பெ.சு.மணி மொழிப்போர் விருது வழங்கினார்.

தோழர் தியாகு, டி.கே. கலா, கனக சுப்புரத்தினம் ஆகியோர் நேயர்களின் கேள்விகளுக்கு வினா வட்டம் நிகழ்ச்சியின் மூலம் விடையளித்தனர். டி.கே.கலா பல்வேறு பாடல்களை பாடி மகிழ்வித்தார்.

பல்வேறு கவிஞர்கள் பங்கேற்ற கவித் தீ அரங்கமும் அதனை தொடர்ந்து இதுவரை இல்லாத புதிய நிகழ்ச்சியாக தோழர் இராசேந்திர சோழன் தலைமையில் நிழல் சட்டமன்றமும் நடைபெற்றது. காவிரி சிக்கல், பெண்கள் இட ஒதுக்கீடு ஆகியவற்றை விவாதிக்கப் போய் உண்மை சட்ட மன்றம் போல், அடிதடி சண்டையுடன் நாற்காலி வீச்சுடன் முடிந்தது.

அடுத்து பேராசிரியர் இரா. இளவரசு தலைமையில் தமிழ் வழிக் கல்வி செயல்திட்ட அரங்கம் நடைபெற்றது. பேரா. கல்யாணி, பேரா அரங்க சுப்பையா நாஞ்சில் சம்பத் ஆகியோர் பேசினர்.

தமிழ் வழிக் கல்வி அறப் போராட்ட சிறப்பு மலரை பேராசிரியர் சாலினியார் வெளியிட 'நக்கீரன்' கோபால் பெற்றுக் கொண்டார்.

மரண தண்டனை எதிர்ப்பு அரங்கம் திரு மெல்கியோர் தலைமையில் மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. பேராசிரியர் சுப.வீரபாண்டியன் புதுக்கோட்டை பாவாணன் அகியோர் உணர்ச்சிமிக்க உரை நிகழ்த்தி அனைவர் நெஞ்சிலும் மரண தண்டனைக்கு எதிராக தீமூட்டினார்கள்.

நிறைவு விழா நிகழ்ச்சி நிறுவனர் திரு நா.அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. புலவர் இராசு, அருகோபாலன் பேராசிரியர் அருளியார், ஆஸ்திரேலியா மருத்துவர் பொன் சத்தியநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள். இறுதியாக திரு பழ.நெடுமாறன் சிறப்புரையாற்றினார்.

இரண்டு நாள் மிகச் சிறப்பாக நடைபெற்ற தமிழகப் பெருவிழாவில், தமிழ் வழிக் கல்வி, கச்சத்தீவு, மரண தண்டனை எதிர்ப்பு, தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திரு. அ. சவுரிராசன் நன்றி கூறினார்.

**தமிழகப் பெருவிழாவில் இடம் பெற்ற உரைகள் சில அடுத்தப் பக்கங்களில்**

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

## வெற்றித் திருநாள் வெகுதூரத்தில் இல்லை

**- நா. அருணாசலம்**

தமிழ்ச் சான்றோர் பேரவைக்கு உங்கள் துணை வேண்டும்; உங்களுடைய பங்களிப்பு வேண்டும், உங்களுடைய உணர்வு வேண்டும்; உங்களுடைய உற்சாகம் வேண்டும் என்று கேட்டு, எத்தனை சங்கங்கள் தோன்றித் தமிழை வளர்த்தாலும் கூட ஆபத்து நேரத்தில் தமிழைக் கட்டிக்காக்கின்ற பெரும் பொறுப்பு தமிழ்ச் சான்றோர் பேரவைக்கு உண்டு. முச்சங்கங்கள் இன்று இல்லாவிட்டாலும் தமிழைக் காக்கின்ற பொறுப்பை தமிழ்ச் சான்றோர் பேரவைக்கு கிடைத்த பெரும் பேறாக எண்ணி நான் பெருமை கொள்கிறேன்.



ஆங்கிலம் ஒரு மொழி என்பதற்காக அதை நாம் எதிர்க்கவில்லை. அதன் ஆதிக்கத்தை எதிர்க்கிறோம். அது நம்முடைய மொழியை மட்டும் அழிப்பதில்லை; நம்முடைய கலாச்சாரத்தை, பண்பாட்டை, நாம் இதுவரை 2000 ஆண்டுகளாகக் கட்டிக் காத்துவந்த பெருமையைக் குலைக்கின்ற பெரிய அழிவைச் செய்து கொண்டிருப்பதுதான் அதற்கு உள்ள பெரிய சக்தியாக நான் கருதுகிறேன்.

ஆனால், ஆங்கிலத்தில் படித்தால் தான் அறிவு வளரும் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அறிவே ஆங்கிலமாக இருந்து விட்டால் நமக்கொன்றும் பஞ்சமில்லை. எல்லோருமே அத்தகைய அறிவை தேடிக் கொள்ளலாம். அதை விலை கொடுத்து வாங்கி விடலாம். ஆனால் ஆங்கிலம் அறிவை வளர்ப்பதற்கு மாறாக அடிமைத் தனத்தை வளர்க்கிறது. தமிழ் நம்முடைய உயிரோடு கலந்தது, ஊனோடு கலந்தது. அது நம் ரத்தத்தில் உறைந்திருக்கிறது. நம்முடைய மரபணுக்களில் உள்ளது. நம் முன்னோர்கள் 2000 ஆண்டுகளாகக் கட்டிக் காத்து வந்த நம் மொழியை எந்தக் காரணம் கொண்டும், எத்தகைய சூழலிலும், எத்தனை தடைகள் வந்தாலும் அத்தடைகளை எல்லாம் கடந்து நம் மொழியை முழுமையாக மீட்டு, சரியாக மீட்டு நம்முடைய சந்ததிக்கு விட்டுச் செல்லாவிட்டால் , நாம் ஒரு சந்ததியாக வாழ்ந்ததற்குப் பொருளே இல்லாமல் போய்விடும் என்கிற அச்சம் எனக்கு. ஆங்கிலத்தில் படிப்பது எளிதென்றெல்லாம் கூறுகிறார்கள். நேற்று தொலைக்காட்சியில் மொழி பெயர்ப்புத்துறை பேராசிரியர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். இத்தனை மக்களுக்கும் ஆங்கில அறிவை ஊட்டி, அவர்கள் அறிவியலைக் கற்றுக் கொள்ள அந்த ஆங்கில அறிவு பயன்பட வேண்டும் என்று சொல்வதைவிட ஒரு மொழி பெயர்ப்பாளன் ஆங்கில வழி அறிவியலை, மொழி பெயர்த்துத் தாய் மொழியில் கொடுத்துவிட்டால் எல்லோரும் தாய்மொழியில் படித்து விடலாமே. இது மிக எளிய காரியமாயிற்றே என்று சொன்னார். இது நம் அறிஞர்களுக்குப் புரியாமல் போய்விட்டதே! இந்த உண்மையை உங்களுக்குச் சொல்வதால் எனக்கு இருக்கின்ற பெருமை என்னவென்றால், தமிழறிஞர்கள் அத்தனை பேரும் இங்கு வராவிட்டாலும், மேடையில் பேச அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டாலும் கூட, அவர்களுக்கு இருக்கும் உணர்வு ஒரு துளியேனும் நச்சுப்படாமல் இருக்கிறது என்பதுதான் நான் கண்ட உண்மை. இந்த உண்மையை உங்களுக்குச் சொல்வது என் கடமையாகக் கருதுகிறேன்.

நான் அழுத்தமாகச் சில வார்த்தைகளைச் சொல்லிவிடக் கூடாது என்ற அச்சத்தில் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். நாங்கள் கோழைகள் அல்ல; எங்களுக்குப் போராட தெரியாது என்றும் எண்ண வேண்டாம். எங்கள் மூத்தவர்கள் எங்களை வழி நடத்திச் செல்கிறார்கள் என்று அச்சப் பட்டு அச்சப்பட்டு அவர் தம் காலடியை ஒற்றி ஒற்றி நடந்து கொண்டு இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

நாளை ஒரு காலத்தில் என் மொழிக்கும், இனத்திற்கும், இந்த மண்ணிற்கும் ஏதேனும் கேடு வந்தால் நாங்கள் தற்கொலை செய்து கொள்ள மாட்டோம். நாங்கள் சொல்ல மாட்டோம்; செய்து காட்டுவோம். நன்றி! வணக்கம்.

## "ஜூனியர் விகடன் எனும் கழுகு"

**- பெ. மணியரசன்**

தமிழால் நாம் ஒன்றுபட வேண்டும் என்று நாம் குரல் கொடுக்கின்ற பொழுது, நமக்கு இடையூறாக, நமது ஒற்றுமை இந்நாட்டிற்கு ஆபத்து என்று பலர் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஜூனியர் விகடன் என்கின்ற பத்திரிகை. அந்தக் கழுகுக்கு மூக்கு வேர்த்தது. எங்காவது பிணம் விழுந்தால்தான் கழுகுக்கு மூக்கு வேர்க்கும் என்று ஒரு பழமொழி உண்டு. இந்த ஜூவி கழுகுக்கு ஏன் மூக்கு வேர்த்தது என்று தெரியவில்லை. தஞ்சையில் தமிழ்த் தீவிரவாதிகள் திரளுகிறார்கள்? என்ன தீவிரவாதி? அய்யா தமிழண்ணல் ஏ.கே. 47 எடுத்து சுடப் போகிறாரா? இந்தத் தமிழர்கள் ஒன்று கூடிவிடக் கூடாது.



**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com

இவர்களுக்கு ஏதாவது சொல்லி பயமுறுத்த வேண்டும். பீதியுற்ச் செய்ய வேண்டும்.

ஜுனியர் - விகடனைக் கேட்கிறேன், தஞ்சையில் தீவிரவாதிகள் திரண்டு என்ன செய்கிறார்களாம்? நம்முடைய அருமைத் தமிழர்கள் நளினி, சாந்தன், முருகன் பேரறிவாளன் ஆகியோரைத் தூக்கில் போட்டு விட்டால், விடுதலைப் புலிகளின் பாணியிலே வீரவணக்க மாநாடாக இது மாறுமாம். அது என்ன விடுதலைப்புலி பாணி என்று எனக்குத் தெரியவில்லை. அந்த ஜுனியர் விகடன் கழுகுக்குத்தான் தெரியும்! என்ன மிரட்டுகிறாய்? நாலு பேரைத் தூக்கில் போடக் கூடாது என்று நாங்கள் சொல்கிறோம். சட்டத்தின் முன்னால் நாங்கள் பிச்சைக் கேட்கவில்லை; நீதி கேட்கிறோம். நீதிக்குப் புறம்பாக நான்கு பேருக்குத் தூக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்கு வழங்கலாம் மற்ற வழக்குகளில் மரண தண்டனை வழங்கக் கூடாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு விரோதமாக அந்தச் சம்பவத்தில் நேரடியாக ஈடுபடாத, அந்தச் சம்பவம் பற்றித் தெரியாத அப்பாவித் தமிழர்களை அங்கு கொண்டு போய் நிறுத்தி நீ ராசீவ்காந்தி என்பதற்காகப் பலி கொடுக்க வைத்திருந்தால் இந்த இனத்தை நீ என்ன நினைக்கிறாய்? நாதியற்ற இனம் என்று நினைக்கிறாயா? கேள்வி கேட்க மாட்டோம் என்று நினைக்கிறாயா? அதை முன்னறிந்து கொண்டு ஜுனியர் விகடன் எழுதுகிறது. இப்பொழுது ஜுனியர் விகடன் என்ன எழுதுகிறது? தூக்கு கயிறு வாங்க் கல்கத்தாவுக்குப் பயணம். எவ்வளவு இனிமை அவர்களுக்குப் பாருங்கள்.

மாலன் என்கிற ஒரு நபர். அவர் இன்றைக்குச் சில பேருக்குச் சிந்தனை நீர்த்தேக்கம். அதனால்தான் பத்திரிகை பெயர் சிவப்பாக இருந்தாலும் கூட எழுத்து மஞ்சளாக வந்து கொண்டிருக்கிறது. அவர் எழுதினார், தூக்கு தண்டனை 26 பேருக்கு விதித்தது மட்டும் போதாது. அந்தத் தூக்குக் கயிறுக்காக சக்கியை இழுக்கும் சத்தம் நம் காதுகளில் விழ வேண்டும் என்று. தமிழன் வாங்கிப் படிக்கின்ற பத்திரிகையிலே மாலன் இப்படி தலையங்கம் தீட்ட முடிகிறது என்றால் . எந்தத் துணிச்சலை வைத்து. நாம் ஏமாளிகள், இளிச்சவாயர்கள், இது நாதியற்ற இனம், கேள்வி கேட்க மாட்டோம் என்கின்ற நிலையிலேதான் அவர்கள் எழுதுகிறார்கள்.

தமிழ் ஈழத்தை நாம் அனைவரும் ஆதரிக்கிறோம். நம்மில் சிலர் விடுதலைப் புலிகளை நேரடியாக ஆதரிக்கிறோம். சிலர் அப்படி நேரடியாக ஆதரிப்பது இல்லை. எனவே இது விடுதலைப் புலிகளுக்காக நடத்தப்படக் கூடிய மாநாடு அல்ல. இங்குள்ள 6 கோடி தமிழருக்காக இந்த மாநாடு நடத்தப்படுகிறது. இன்றைக்கு ஒரு செய்தி வருகிறது - வாழப்பாடி ராமமூர்த்தி கர்ஜிக்கிறார். நான்கு பேரைத் தூக்கில் போட்டே ஆக வேண்டும் என்று. வாழப்பாடி ராமமூர்த்தி விபீஷணன் குரலில் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார். அவர் தமிழ் நாட்டு சுப்பிரமணிய சாமி. சுப்பிரமணிய சாமி அகில இந்திய வாழப்பாடி. திண்டிவனம் ராமமூர்த்தியும் இதில் சேர்ந்து கொண்டார். ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் சொல்லுகிறார் மரண தண்டனையை உலகம் முழுவதும் ஒழிக்க வேண்டும் என்று. போப் ஆண்டவர் சொல்லுகிறார். மரண தண்டனனை ஒழித்தே தீர வேண்டும் என்று. 4 பேருக்காக மட்டும் அல்ல, மரண தண்டனை என்பது கொடுமையானது, அராஜகமானது, உயிரைப் பறிக்கக் கூடாது. ஆயுள் தண்டனையாக மாற்று கொலைக் குற்றவாளிகளுக்கு. உலகம் முழுவதும் இந்தக் கருத்து வலியுறுத்தப்படுகிறது. ஆனால், வாழப்பாடி ராமமூர்த்தியும், திண்டிவனம் ராமமூர்த்தியும் சொல்கிறார்கள். 4 பேரை தூக்கில் போட்டே ஆக வேண்டும் என்று. யாருடைய விசுவாசத்தைப் பெறுவதற்காக? 6 கோடித் தமிழர்களின் விசுவாசத்தைப் பெற வேண்டும் என்று அவர்களுக்கு அக்கறை இல்லை. டெல்லி எஜமானர் - எஜமானியின் விசுவாசத்தை அவர்கள் பெ வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையிலே தமிழ்நாட்டு அரசியல் போய்க் கொண்டிருக்கும் காரணத்தால் தான் இங்கே ஜுனியர் விகடன் போன்ற பத்திரிக்கைகளெல்லாம் இப்படித் திமிராக எழுதுகின்றன. இப்படித் தமிழ் இனத்திற்கு எதிராக, தமிழ்த் தேசத்திற்கு எதிராக எழுதக் கூடிய எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் அவற்றை நிராகரிப்பது மட்டுமல்ல அவற்றை எதிர்த்தும் போராட வேண்டும். இல்லையெல் இந்தப் பத்திரிகைகள் நம்மை அழித்து விடும் மறந்து விடாதீர்கள். என்ன பெரிய பத்திரிகை இது ( மேடையிலே ஜுனியர் விகடன் கிழித்தெறியப்படுகிறது) தமிழினம் எழுந்து விட்டால்தான் இவர்கள் நிறுத்துவார்களே தவிர இவர்களிடம் நியாயத்தைப் பெற முடியாது. உன்னைச் சந்திக்க நாங்கள் தயார் என்று எழுந்து வராமல் இவர்களை நிறுத்த முடியாது. இல்லையெல் நம்மை மிரட்டிக் கொண்டே இருப்பார்கள்.

நண்பர்களே, 21 ஆம் நூற்றாண்டு பிறக்கப்போகிறது. ஆம் நூற்றாண்டு தமிழ்த் தேசியத்தின் நூற்றாண்டாக இருக்கப் போகிறது. யார் கொக்கரித்தாலும் சரி, வெங்கய்யாநாயுடு கொக்கரிக்கிறார். மிகவும் ஆவேசமாகக் கொக்கரிக்கிறார். தூக்கில் போட்டே ஆக வேண்டுமென்று. வெங்கய்யா நாயுடு ஒரு வெங்காய வெடி. நம்மிடம் ஒரு சிவகாசி அணுக்குண்டு இருக்கிறது. வெடிக்க வேண்டிய நேரத்தில் அது வெடிக்க வேண்டும்.

ஒரு நூற்றாண்டு முடியும்பொழுதும் இன்னொரு நூற்றாண்டு பிறக்கும் பொழுதும் சுமந்து வந்த சுமைகள் தாங்காமல் வரலாறு புரண்டு படுக்கிறது. புதிய சகாப்தங்கள் உருவாகின்றன. அப்படிதான் 18 ஆம் நூற்றாண்டு இறுதியிலேயே அந்த மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரஷ்யப் புரட்சி வெற்றிப் பெற்றது. 21 ஆம் நூற்றாண்டிலே ஈழப் புரட்சி வெற்றிப் பெறப் போகின்றது. தமிழ்த் தேசக் குடியரசும் உருவாகப் போகிறது. 6 கோடித் தமிழர்களுக்கான தமிழ்த் தேச குடியரசும் உருவாகப் போகிறது. உங்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்!

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்


www.padippakam.com

## "தனித்தமிழ் ஈழம் உறுதி"

– பழ. நெடுமாறன்

இப்போதும் தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போராட்டம் உருவாகி உள்ளது. சான்றோர் பேரவையின் நிறுவனர் நா. அருணாசலம் அதற்கான முன் முயற்சி எடுத்துத் தமிழதறிஞர்களின் சாகும்வரையில் உண்ணாநோன்பு போராட்டத்திற்கு வழிவகுத்தார். இப்போராட்டத்திற்கு ஆதரவாகத் தமிழகமெங்கும் உள்ள தமிழ் உணர்வாளர்கள் ஒன்று கூடினார்கள். தமிழ் வழிக் கல்விக்காக தங்கள் உயிரையே தியாகம் செய்ய இவர்கள் முன் வந்ததன் விளைவாக நீதியரசர் மோகன் குழுவைத் தமிழக அரசு அமைத்தது. தமிழ் வழிக் கல்விக்கு விடிவு பிறந்திருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 26 தமிழர்களில் 22 தமிழர்களை நீதிமன்றம் மூலம்



மீட்டுள்ளோம். மீதமுள்ள நான்கு பேர்களையும் மீட்க வேண்டும். இஃது ஒரு மனித நேயப் பிரச்சினை.

உலகெங்கும் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு வரும் இக்காலக் கட்டத்தில் இந்தியாவிலும் மரண தண்டனை அறவே ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் சிலர் மனித நேயத்துடன் இந்தப் பிரச்சினையைப் பார்க்காமல் இதற்கு அரசியல் சாயம் பூசி வருகிறார்கள். உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்ற நீதிமான்கள் நமக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகிறார்கள். மனித உரிமைகளுக்கான சர்வதேச பொது மன்னிப்புச் சபை, மனித உரிமைக் கமிஷன், இந்திய மக்கள் சிவில் உரிமைக் கழகம் போன்ற அமைப்புகளும் பல்வேறு கட்சித் தலைவர்களும் இந்தப் பிரச்சினையில் ஆதரவளித்து வருகிறார்கள்.

இரண்டாம் உலகப் போர் முடிவில் அமெரிக்காவில் ரோசன்பர்க் தம்பதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது அதற்கு எதிராக உலக இயக்கம் உருவானது. அதற்குப் பிறகு 26 தமிழர்களின் பிரச்சினைதான் இன்றைக்கு உலகம் தழுவியப் பிரச்சினையாக ஆகியுள்ளது. தொடர்ந்து மக்கள் ஆதரவைத் திரட்டி இந்த நான்கு தமிழர்களைத் தூக்கு மேடையில் இருந்து மீட்க வேண்டும்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முடியாது என்ற உண்மையைச் சந்திரிகா உணர்ந்து தீர வேண்டியக் கட்டாயத்தை விடுதலைப்புலிகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். அண்மையில் காலமான மூத்த தமிழ்த் தலைவரான தொண்டமான் அப்பட்டமாகவே இதைச் சந்திரிகாவுக்குத் தெரிவித்தார். விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசவும் அவர் தயாராக இருந்த நிலையில் அவர் மறைந்தது தமிழ்ச் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் விருப்பம் இல்லாதவர்கள் என இங்குள்ளவர்கள் விவரம் புரியாமல் குற்றம் சாட்டுகிறார்கள். இலங்கையில் பேச்சுவார்த்தைகள் பயன் அளிக்காமல் போனதற்குப் பிரபாகரனோ, புலிகளோ காரணம் அல்ல.

சிங்கள அரசுடன் பேசி பிரபாகரன் ஓர் உடன்பாடு கண்டால் 95 சதவிகித ஈழத், தமிழர்கள் அதை ஏற்றுக் கொள்ளுவார்கள். மதித்து நடப்பார்கள். ஆனால் சிங்களருக்கு அப்படி ஒரு தலைமை இல்லை. உடன்பாட்டில் சந்திரிகா கையெழுத்திட்டால் விக்கிரமசிங்கே எதிர்ப்பார். விக்கிரமசிங்கே கையெழுத்திட்டால் சந்திரிகா எதிர்ப்பார். சிங்களருக்குள் ஒற்றுமையும் இல்லை. அனைவரையும் ஒன்றுபடுத்தக் கூடிய தலைமையும் இல்லை. இந்த உண்மையை அனைவரும் உணர வேண்டும்

அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழனுக்கு என்று ஒரு நாடு உலகில் தோன்றும். அதை யாரும் தடுக்க முடியாது. ♦

### அறிவிப்பு

தமிழர் கண்ணோட்டம் ஆண்டு கட்டணம் முடிவடைந்தவர்கள் ரூ.60/- செலுத்தி புதுப்பித்துக் கொள்ளுங்கள்

– ஆர்.

**பான்பராக் தடை கோரி சென்னையில் 16.12.99 த.இ.மு. கோத்தாரி முற்றுகை**



படிப்பகம்

www.padippakam.com




ஓவியம்: **மணிலா**

**போதைப்பாக்கான பான் பராக்கைத் தடைசெய்யக் கோரி**
**தமிழக இளைஞர் முன்னணி**
**சென்னையில் 16.12.99 அன்று முற்றுகைப் போராட்டம்**

*இடம்:* **சௌகார் பேட்டை வால்டாக்ஸ் சாலை**
**ஆர்.ஜே. முகவாண்மை**
(கோத்தாரி முகவர்)

www.padippakam.com



# நரியின் தலையும் நாகப்பல்லும்

-தணிகைச்செல்வன்

(சென்னையில் - தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை விழாவில் பாடியது)

ஞானமெலாம் என் மொழியில்
நானடைய என்ன தடை?
ஞாலமெலாம் என் மொழியில்
நானறிய என்ன விலை?
வானமெலாம் என் மொழிக்கு
வசமாக என்ன குறை?
வாதமெலாம் போதும் இனி
வாள்முனையே எங்கள் விடை.

❖

விழித்துப்பார் துளியேனும் உணர்விருந்தால்!
விரித்துப்பார் உணர்வுக்குச் சிறகிருந்தால்!
எடுத்துப்பார் வரலாற்றை இயலும் என்றால்!
எண்ணிப் பார் தாய் நாட்டை தமிழன் என்றால்!

❖

விற்றுவிட்டார் தமிழ்நாட்டைப் புதுடில்லிக்கு!
வரவழைத்தார் ஆங்கிலத்தைத் தமிழ் எல்லைக்கு
வற்ற விட்டார் காவிரியை நாற்காலிக்கு
வாழ விட்டார் வேதியத்தை நெடுநாளைக்கு

❖

இருளின் ஆட்சி சுமக்கிறோமே
நாயினும் கேடாய் -ஒரு
எள் முனையும் விடிவில்லை
ஆயிரம் ஆண்டாய்
நரியின் தலையும் நாகப்பல்லும்
கொண்ட தலைவர்கள் - எங்கள்
நலம் திருட விட்டதனால்
வந்தவிளைவுகள்
எரியும் தீயில் எங்கள் அன்னை
நிற்கப் பொறுப்பதோ - எம்
இன உரிமை டில்லியிடம்
விற்கச் சகிப்பதோ?
பரிதி அதோ எழுந்தது பார்
தெற்குத் தீவிலே - அதைப்
பார்த்துத் தமிழ்த் தேசம் எழும்
ரத்தத் தீர்விலே